78



T4507
OFFICE OF THE CURATOR
RECEIVED
1985
CHEPAUK, MADRAS-5
GOVT. ORI

# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



# தேனோலை

பழஞ்சுவடிக் காலாண்டிதழ்

ஏழாம் இதழ்—ஜனவரி 76

இந்த இதழில்

1. மெச்சும் பெருமாள் பாண்டியன்
2. காலிங்கராயன் கைபீது
3. மோரூர்க் காங்கேயர் ஏடு
4. கும்பினிக் கடிதம்

பதிப்பாசிரியர் :

கொடுமுடி சண்முகப்பிரகதம்

26, இந்திரா நகர், சென்னை-600020

தேனோலை
பழஞ்சுவடிக் காலாண்டிதழ்
26 இந்திரா நகர்
சென்னை-600020.

| | | |
|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 4-00 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. | 10-00 |
| ஆயுட் கட்டணம் | ரூ. | 100-00 |

அறிவியல், வரலாற்றுத் திங்களிதழான
கொங்கு இதழுக்கு
கட்டணம் அனுப்பிவிட்டீர்களா ?

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 3-50 |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. | 10-00 |
| ஆயுட் கட்டணம் | ரூ. | 100-00 |

கொங்கு பதிப்பக வெளியீடுகள் :

| | | |
|---|---|---|
| ஆய்வுத்தேன்—வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பு | ரூ. | 4-00 |
| மதுக்கரைப் பட்டயம் | ரூ. | 3-00 |
| பூர்வச் சக்கரவர்த்தி நாடகம் | ரூ. | |

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014

## அரசனின் ஆதரவுமொழி

அரசன் இவ்வார்த்தைகேட்டு
அவசரமாய் வந்தல்லவோ,
"அஞ்சவேண்டாம் பெண்ணரசே
ஆதரிப்பேன் உங்களைத்தான்
கவலைப்பட்டு என்ன செய்ய
கட்டழகிப் பெண் கொடியே
தம்பியுட காரியத்தைத்
தமக்கையரே முடித்து வாரும்"
"ராசாவே ராசாகோவே
ராசமுடி பாண்டியரே.
அரண்மனை நெருப்பது[1] தான்
அடியாளுக்கு வேணுமென்று"
அக்கா தங்கை இருபேரும்
அன்புடனே சொன்னபோது,
"பெண்களுடன் சென்
றல்லவோ
பெருமாள் பாண்டியர்க்கு
காரியத்தை முடித்துவாரும்
கட்டழகா மந்திரியே!" என்றார்.

## ஈமத்துக்குச் செல்லுதல்

சாமான்களைச் சேகரித்தார்
சமர்த்தனை எரிப்பதற்கு
சந்தனக் கட்டை கொண்டு
சடைச்சியரும் வாராளே.
வளத்தராக்கி பெண்கொடியும்
வாய்திறந்து அழுதுவாராள்.
வெட்டிவேரும் பன்னீரும்
வேந்தனுக்குக் கொண்டு வாரார்.
மாதேரு முக்கதிலே
மந்திரியும் பெண்கொடியும்
சந்தனக் கட்டை வெட்டி
சதுரமாய்ப் பிளந்தடுக்கினார்கள்
குங்குமக் கட்டை வெட்டி
குறுக்கே பிளந்தடுக்கினார்கள்,

## இறுதிக்கடன்

உடலைக் கிடத்திடவே
உடன்பிறந்தானைப்
பார்த்தாளே.
வரப்போ தலையாணி[2]
வாமடையோ பஞ்சுமெத்தை
கழுவிக்குளுப்பாட்டி தம்பியரைக்
கட்டையிலே தூக்கி வைத்து
சந்தனமும் பன்னீரும்
சாந்தாகப் பூசலுற்றார்
காட்டில் எருவெடுத்து
கன்னியர்கள் தீமூட்டி,
ஈரஎருவெடுத்து
இருபுறமும் தீ மூட்டி,

## நன்றிமிக்க நாய்கள்

காச்சி நாயும் பூச்சிநாயும்
கதறுதே அன்னேரம்
மூட்டத்தைச் சுத்துதய்யா
முன்னே வந்து வணங்குதய்யா
சாத்தாவை வணங்குதய்யா,
சாம்பசிவனை வணங்குதய்யா.
மூன்றுதரம் சுத்தி வந்து
முக்கால் அடிவணங்கி
நாலுதரம் சுத்தி வந்து
நாதனை வணங்குதய்யா
ஐந்துதரம் சுத்தி வந்து
அரண்பாதம் வணங்குதய்யா.
ஏழுதரம் சுத்திவந்து
ஏறுதய்யா கட்டையிலே
மண்டியிட்டு படுக்குதய்யா
பாண்டியன் உடலோடு
பூச்சிநாயும் காச்சி நாயும்
புடிச்சி எரியுதங்கே.
பாண்டியரும் நாய்களுமே
பஸ்பமானார் அந்நேரம்

## இறைநிலை சேரல்

மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுள்ள நாய்கள்
ரெண்டும்
வெந்து தணிந்தார்கள்
வீரசொர்க்கம் சேர்ந்தார்கள்[3]
மாண்டு மடிந்தார்கள்
மன்னர் வைகுந்தம் சேர்ந்தார்
கள்
தெய்வப் பிறப்பாகச்
சிருஷ்டித்தார் பகவானும்.

1. அரண்மனை நெருப்பு-அரசுமரியாதையுடன் செய்யும் இறுதிக் கடன்.
2. தலையாணி-தலையணை.
3. வீர சொர்க்கம்-வீரர்கள் அடையும் தெய்வ உலகு.

## சிறப்புப் பெயர் அகராதி


அதலிஊத்து 680, 1463.
அப்பன் கோவில் 2157. 2160.
அம்பாசமுத்திரம் 2072, 2134, 2160.
அம்பை 2059.
அரண்பாதம் 2511.
அரிச்சுவடி 944.
அரிராம பாண்டியர் 1649, 1650.
அருந்ததி 1583.
அழகிய பாண்டிபுரம் 1706.
ஆச்சிவூர் 1648.
ஆத்தாங்கரை விலக்கு 2191.
ஆதிசிவன் 253.
ஆரியப் பட்டத்தேவர் 1510, 1511, 1522, 15 3, 1600, 1606.
இருளி 792, 798, 939, 1009, 1018, 1024, 1046, 1093, 1128.
உக்கிரங் கோட்டை 743, 1308, 1321, 1339, 1359, 1383, 1397, 1459.
ஊர்க்காடு 2178.
எண்சுவடி 944.
எமன் 2409.
ஏமன் 1260.
கசவர் பட்டணம் 1681, 1697.
கணபதி 48, 53.
கயிலை 15, 18, 45.
கரிசூழ்ந்த மங்கலம் 2192, 2202.
கருங்காடு 790, 850, 1008, 1016, 1050, 1127, 1284, 1828, 1900, 1912, 1977, 2034.
கள்ளநாட்டார் 1679, 1682, 1694, 1709, 1711, 1715, 1719, 1735, 1783, 1805, 1825, 1905, 1972, 2214, 2216, 2251, 2263, 2270, 2283, 2285. 2289, 2297.
கறுப்பண்ணத்தேவர் 1701.
கறுப்புசாமி 1737, 1740, 1744, 1811, 1845, 1853, 1854.
கனகக் குடும்பன்வளவு 1066, 1790, 1888, 1932.
காஞ்சிபுரம் 1662, 1680, 1696, 1738.
காவேரி 2036.
காளிகாதேவி 2142.
காளிகோவில் 190, 660, 663, 808, 1051, 1067, 1271.
காளிமுத்துத்தேவர் 1507.
கிளாக்குடையார் வாசல் 1782.
கிளுவடித்துறை 2153.
கீழச்வேல் பாலம் 2152.
குழிப்பெருக்கம் 945.
குறுக்குத்துறை 1714.
கைலாசம் 20, 2297.
கொலுப் பிச்சிதொப்பு 683.
கொளுமடை 1505, 1515
கொற்றவாளி வம்சம் 1187, 1123, 1332.
கொன்றைவேந்தன் 945.
கோபால சமுத்திரம் 1186, 1237, 1331, 1519, 1570.
சக்கர நகரம் 180, 182.
சங்கர பாண்டித் தேவர் 744,748, 767, 1309, 1353, 1360, 1392,
சங்கர வடிவம்மாள் 219, 223,365 460, 490, 496, 640, 698, 781, 1312.
சங்கரன் 482
சங்கரன் கோவில் 276, 286, 714.
சடைச்சி 483, 783, 1422, 1446, 1609, 1639, 1646, 1651, 2477,
சந்திரன் 1632.
சவுக்கைத் தோப்பு 673, 1366.
சாத்தா 2324, 2504.
சாம்பசிவ மூர்த்தி 47.
சாம்பசிவன் 2505.
சாலாட்சி அம்மாள் 769.
சித்திரைமாதம் 1531, 1535.
சிவந்தி பாலம் 2155.
சிவன்கோவில் 188, 804, 1060, 1279, 1823.
சிவனார் 23, 25, 27, 40.
சீதை, 1634.
சீராமையர் வாசல் 1784.
சுமைதாங்கி 677, 1466.
சுத்தமல்லி 676, 1465.
சுலுபாலம் 2032.
சுவேதமகாரிசி 22, 68, 74, 100, 110, 114, 178.
சுவேதமகாரிசி வனம் 60, 148.
சுவேதரிசி 11.
சூரியன் 1630.
சேரன் மகாதேவி 2156.
சொக்கலிங்க நாதர் 140.

சோலையபுரம் 2176.
தருமராசா கோவில் 1779
தருவை 1778.
தவன கோவில் 2030
தாம்பரவர்ணி 33, 34, 50, 70, 96, 146, 669, 755, 794, 1054, 1058, 1281, 1330, 1343, 1365, 1469, 1718, 1826, 1882.
தீர்த்தப திவம்முசம் 1401.
துர்க்கை 162, 1068, 1271.
துரோபதை 1636.
துளசிமாடம் 1881, 2177.
துஷ்டன் 1119, 1840, 2150, 2328.
தேசமாணிக்கம் விலக்கு 2154.
தேவர்குளம் 1698, 1702, 2206.
தொட்டிபாலம் 1880.
நாசக்குடும்பன் 806, 1064, 1277, 1788, 1822, 1884, 1890, 1934, 1970.
நெல்லையம்பலம் 1712.
நெல்லையப்பர் 1713.
பச்சையாறு 1780, 2026.
பசுக்கதை 948.
பசுங்கிளி அய்யர் வாசல் 1786
பத்தமடையாப்பிள்ளைப் பாலம் 2028, 2195.
பரமசிவம் 16.
பறக்குளம் 1787.
பாட்டாளியார் வீதி 2182.
பாண்டிய நாடு 31, 32.
பாண்டியமார் 0, 90, 98.
பாண்டியர் 129, 196, 454, 562, 753, 920.
பார்வதி 16.
பாரதம் 948.
பாளையங்கால் 802, 1059, 1280, 1781, 1824, 1883, 2146, 2190, 2314.
பாளையாத்தாங்கால் 666.
பிரமதேவன் 1258.
பெருமாள் 955.
பெருமாள் பாண்டியன் 2471.
பொன்பாண்டியன் 734.
பொன் பெருமாள் தேவர் 201, 213, 218, 563, 571, 597, 632, 746, 780, 810, 828, 842, 1004, 1020, 1311, 1413.
மகாதேவர் 21.
மகாதேவர் அய்யனார் 2321, 2433.
மஞ்சவிளை தோப்பு 378.
மதுரை 103, 127.
மதுரைப் பட்டணம் 128.
மன்மதன் 220, 1153, 1295, 1602.
மாஞ்சோலை 2179.
மாதேருமுக்கு 2320, 2432, 2482.
மானாட்டான் சாலை 2024.
மானூர் 684, 737, 1461, 1708.
மீனாட்சி அம்பிகை 141.
முக்கண்ணன் 492.
முப்பிடாதி அம்மாள் 152, 661, 2144.
முன்னீர் பள்ளம் 1776.
முன்னீர் பாளையம் 1720.
மூங்கில் வனம் 51, 104.
மூங்கிலடி தீர்த்தம் 71.
மூங்கிலடித்துறை 1385.
மெச்சும் பெருமாள் 557, 1012, 1029, 1072, 1092, 1110. 1118, 1140, 1239, 1349, 1352, 1356, 1369, 1405, 1455, 1473, 1653, 1658, 1831, 1856, 1868, 1962, 1988, 2021, 2066, 2245, 2257, 2256, 2298, 2334, 2372, 2420, 2444, 2521.
மோகினியாள் 1256.
ரதி 220, 1153, 1295, 1602.
ராசகோபால சமுத்திரம் 670, 756, 786, 1471.
ராமாயணம் 949.
ராமாலட்சுமணா களஞ்சியம் 132.
ராமையம்பட்டி 1710.
ராஜபாளையம் 1113.
வடமலையான் 1262.
வளத்தராக்கி 416, 438, 482, 1313, 1421, 1446, 1455, 1512, 1551, 1601, 1638, 2104, 2404, 2478.
வன்னிக்கரந்தை 1698, 2206.
வாழ்மதுரை 79.
வித்தை வினாயகன் 260.
விளாகத்து விலக்கு 1716.
வினாயகர் 75, 113.
விஸ்வநாதர் வாசல் 1056, 1283.

வீமன் 1119, 1838, 2148, 2366.
வீரக்கரைசாள ராசா 86, 176, 758, 1002, 1656, 1960.
வீரகம்பதி 2158, 2181.
வீரபத்திரத்தேவர் 1726, 1752.
வீரமார்த்தாண்டராசா 87, 171. 559, 1003, 1657, 1961, 1984.
வெள்ளாங்குழி நாடு 2159, 2180.
வெள்ளைக்கணபதி 43, 77.
வெள்ளைக்கரை 674, 1476.
வெள்ளைப் பிள்ளையார் வாசல் 2364.
வெள்ளை விநாயகர் 54, 101, 664.
வைகுந்தம் 2525.

மயிலேறி பாடிய
மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை
(வில்லுப்பாடல்)

# ஆய்வுரை

## கதை கிடைத்த வரலாறு

ஒரு நாள் மாலை நேரத்தில் நானும், என் தங்கையின் கணவர், மைத்துணர் பெருமாள் பாண்டியனும் எனது வீட்டின் மாடியில் அமர்ந்துகொண்டு பலவற்றைப் பேசும்போது வில்லுப் பாடல் களைப்பற்றியும் பேசினோம். அவருக்குப் பிறந்த ஊர் கோபால சமுத்திரம். பொருநை நதிக்கரையில், பொங்கி வரும் புதுவெள் ளத்தை எத்தனையோ தலைமுறைகளாகப் பார்த்துப் பார்த்து, பரவச நிலையில் மோனதவம் செய்வது போன்று அமர்ந்திருக்கும் அவ்வூர். ''உங்க ஊர்ல என்னென்ன வில்லுக்கதைகளெல்லாம் பாடுறுங்க'' என்று அவரிடம் விசாரித்தேன். அவர் என்னிடம் அப்பொழுதுதான் மெச்சும் பெருமான் பாண்டியன் கதையைப் பற்றியும் சொன்னுர். அக்கதை, எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பாட்டு வடிவத்தில் இக்கதை எங்கு கிடைக்கும், யாரிடம் கிடைக்கும் என்று ஆவலால் கேட்டபோது அவர் என்னைத் தன் ஊர்க்கு அழைத்தார்; சென்றேன்.

பிறகு நானும் அவரும் அங்கிருந்து திருநெல்வேலிக்குச் சென் றோம். வில்லுப் புலவர் மயிலேறி அவர்களைத் தேடி தாம்பிர பரணிக் கரையோரம் அலைந்து, இறுதியில் கண்டு பிடித்தோம். அந்த நாள் என்னால் என்றும் மறக்கமுடியாத நாள். அந்தப் புலவர் எங்களைத் தமது பேச்சு வன்மையால் மிகவும் கவர்ந்து விட்டார், ஆர்வத்தோடு பல குறிப்புகளை விளக்கினார். இறுதி யில், ''மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை''யைப் பற்றிக் கேட்ட போது மிகவும் மகிழ்ச்சியோடு தான் எழுதி வைத்திருந்த இருநூறு

பக்க நோட்டினைத் தந்தார். அந்த நதிக்கரையில் ஆர்வமிக்க ஒரு சீடனைப் போல் அன்று நான் நடந்துகொண்டேன். ஒரு குருவினைப் போல் அவர் அந்த ஏட்டினைத் தந்தபோது, எனக்கு எல்லாமும் பெற்றது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது அந்தக் கதைதான் இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது.

### கதை நடந்த வரலாறு

இக்கதை என்று நடந்தது என்று ஆய்வது மிகவும் சிக்கலாக அமைகின்றது. காரணம் வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் தெளிவாக இதில் இல்லை. இக்கதை, கோபால சமுத்திரம் என்ற சக்கர நகரம் தோன்றுவதினின்றும் தொடங்குகின்றது. அவ்வூர் தோன்றி ஏறக்குறைய 500 ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்று அவ்வூர்ப் பெரியவர் ஒருவர் சொன்னார்.

இக்கதையில் இரண்டு பாண்டிய மன்னர்கள் வருகின்றனர். அவர்களின் பெயர்கள் முறையே, வீரக்கரையாளா ராசா என்றும், வீரமார்த்தாண்ட ராசா என்றும் உள்ளன. பாண்டியர்களின் வரலாற்றில் ஏனோ இவ்விரு பெயர்களும் இடம் பெறவில்லை. இவர்கள், மதுரையினின்றும் தென்னாட்டைச் சுற்றி பார்க்க வந்த போது, சுவேத மகாரிசி வனத்தில் அந்த முனிவரைக் கண்டு, அவரது அருளால், அங்கு ஆட்சியை நிறுவினர் என்ற குறிப்பு தென்படுவதால், எனக்கு ஒன்று தோன்றுகிறது. என்னவென்றால், ஒரு வேளை பாண்டியர்களின் ஆட்சி மதுரையில் நலிவுற்று, தென்பாண்டியில் தங்களது ஆட்சியை நிறுவிய வரலாறுதான் இவ்வாறு பேசப்படுகின்றதோ என்று ஐயுறுகின்றேன். அவ்வாறு இருக்குமென்றால், அக்காலமும் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்னர் தானே.

இக்கதை, கைலாயத்தில் ஆரம்பித்து, கோபால சமுத்திரத்திற்கு வந்து, இடையில் கருங்காடு, உக்கிரன் கோட்டை, அம்பா சமுத்திரம், காஞ்சிபுரம் என்ற ஊர்களுக்குப் போய், இறுதியில் கோபால சமுத்திரத்திலேயே முடிவு பெறுகின்றது.

இக்கதையில், இரண்டு பஞ்சங்கள் குறிக்கப்படுகின்றன. ஒன்று, பொன்பெருமாள் தேவரை, ஊரைவிட்டு ஒட்டி உக்கிரங் கோட்டையில் தங்க வைக்கின்றது. மற்றொன்று, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வந்து, காஞ்சிபுரத்து மறவர்களைக் கொள்ளைக்காரர்களாக்கியுள்ளது. இவ்வாறு அடுத்தடுத்து வந்த பஞ்சங்களின் காலம் எதுவென்றும் கணிக்க, வரலாற்றில் சான்றுகள் இல்லை. இவ்வாறு பஞ்சத்தைப்பற்றி பாடுவதைக் கதைப் பாடல்

மரபு என்று ஒதுக்கிவிட இயலாது: ஏனென்றால், இது வெறும் கற்பனை காவியம் அல்ல: நடந்த முடிந்த ஒரு வீரனின் வாழ்க்கைக் கதை —வரலாற்றுக் கதை.

இக்கதையில் கூறப்படும் இடங்களும், ஊர்களும் இன்றும் உள்ளன. வண்ணாத்தியின் பேரில் வெகுமானமாக அளிக்கப்பட்ட நிலம் இன்றும் 'வண்ணாத்திப் போக்கு' என்றே அழைக்கப்படுகின்றது. தண்டனைக்காக அன்று வெட்டப்பட்ட அட்டைக் கிடங்கு இன்றும் தூர்ந்து போனாலும், அதே பேரில் வழங்கப்படுகின்றது. சிவன் கோவிலும், பிள்ளையார் கோவிலும், முப்பிடாதி அம்மன் கோவிலும், நாமம் இட்ட கிணறும் இன்றும் நம் கண்களுக்குக் காட்சி தருகின்றன. கோட்டை அழிந்துபோன இடம் இன்று மேடிட்டு மண்மூடிக்கிடக் கின்றது. மெச்சும் பெருமாள் பாண்டியரின் பரம்பரையினர் இன்றும் இவ்வூரில் வசிக்கின்றனர். இவர்களால் வணங்கப்படும் தெய்வமாக இன்றும் இப் பாண்டியன் சிலை வடிவில் காட்சி தருகின்றார். போக்காளசாமி என்றும் இவரை அழைக்கின்றனர்.

## கதையின் வரலாறு

சுவேத மகாரிசி என்பவர் சுகமாக வாழ்ந்து வரும்போது, அவருக்குச் சுவையான ஒரு ஆசை எழுந்தது. அதாவது, "கைலாயம் செல்லவேண்டும்; கடவுளைப் பார்க்கவேண்டும்; தலைமை ரிசியாக விளங்கவேண்டுமென்ற வரமும் வாங்க வேண்டும்" என்ற ஆசையால் கைலாயம் சென்றார்; சிவபிரானைக்கண்டார். வரம் கேட்டார். சிவனும் தாம்பரவர்ணிக் கரையில் தவமிருந்தால் வரம் கிடைக்கும் என்றார். எனவே, வெள்ளை விநாயகரையும் அழைத்துக் கொண்டு முனிவர் புறப்பட்டுவந்தார்.

பொருநைக் கரைக்கு வந்த முனிவர், வனமொன்றில் தவமிருந்தார். நாடு வலம் வந்த மதுரை மன்னர்களை விநாயகப் பெருமானது உதவியுடன் கண்டார். அவ்வனத்திலே சக்கர நகரம் என்று ஒரு நாடு அமைத்து அரசாளவேண்டும் என்று முனிவரும் வேண்ட மன்னர்களும் ஒப்பினர்.

## மெச்சும் பெருமாளின் பண்புகள்

இக்கதையில் மெச்சும் பெருமாளின் பாத்திரம்தான் சிறந்து விளங்குகின்றது. அவன்தான் கதைத் தலைவன். அவனது குணச் சிறப்புகள் எண்ணி மகிழ்வதற்குரியது. கதைத் தலைவனுக்குரிய அத்தனைச் சிறப்புகளும் இவனிடம் மொத்தமாக உள்ளன,

பாண்டிய மன்னர்கள் அந்த வனத்தில் நகரமைத்தனர்-அரண் மனை கட்டினர்; குடும்பக்கமார்களைக் குடியேற்றினர்; பொன்னும் பெருமாள் பாண்டியரைத் தலையாரியாக நியமித்தனர்; கோவில் அமைத்தனர்; குறைவின்றி ஆட்சி செய்தனர்.

இவ்வாறு நிறைவுடன் வாழ்ந்து வரும் போது, தலையாரி பாண்டியனுக்கு ஒரு தணியாத குறையுண்டு. அதுதான் குழந்தை யில்லையே என்ற ஏக்கம். சோதிடரைக் கேட்டபோது, 'சங்கரன் கோவிலுக்கு, இருபத்தொரு மாதர்ந்தம் இன்பமுடன் நடவுங்கள், கேட்டது கிடைக்கும் என்றார். சங்கரன் அருளினால் பாண்டியன் மனைவி சங்கர வடிவம்மாள் இரு பெண் குழந்தைகளையும் ஒரு ஆண் குழந்தையையும் பெற்றெடுத்தாள். அவர்களுக்கு முறையே வளத்தராக்கி, சடைச்சி, மெச்சு பெருமாள் என்று பெயரும் இட்டனர்.

மூத்த மகள் பிறந்த நேரமும், மகன் பிறந்த வேளையும் சரி யில்லை. அவர்களின் கிரகப்படி பெற்றவர்கள் ஊரைவிட்டு ஓட வேண்டும் என்ற நிலை, பஞ்சம்வேறு வந்தது. பகுதிப் பணம் கட்ட முடியாத அச்சம் வேறு, அவர்களை ஓர் நாள் இரவு சாம நேரத்தில் ஊரை விட்டே ஓடச் சொன்னது. ஊரை விட்டு ஓடியவர்கள் மறந்துபோய் தமது அருமையான ஆண்குழந்தையை விட்டுவிட்டுச் செல்கின்றனர். இடை வழியில் மகனை விட்டுச் சென்ற எண்ணம் தோன்றினாலும், வேறு வழியில்லாமல் மனதைக் கல்லாக்கிக் கொண்டு உக்கிரன் கோட்டை போய் சேர்ந்தனர். அங்கே, அவர் களுக்குச் சங்கரபாண்டியத் தேவரும் அவரது மனைவியார் சாலாட்சி அம்மையாரும் அடைக்கலம் கொடுக்கின்றனர்.

மறுநாள் அழுக்கெடுக்க வந்து வண்ணாத்தி இருளி, கோபால சமுத்திரத்தில் குழந்தையைக் கண்டெடுக்கிறுள். அரசனின் ஆதர வால் அவளே அக் குழந்தையைத் தன் குழத்தையோடு வளர்த்து வருகிறுள். மெச்சும் பெருமாள் தனது 12 வயதுக்குள் படிக்க வேண்டிய அனைத்தையும் படித்து முடித்து ஆணழகனாய் விளங்கு கின்றுன். ஆற்றல்மிக்க வீரனாகவும் விளங்குகின்றுன்.

பாண்டியமன்னர்கள் பெருமாளை அழைத்து அவனை அரண் மனையில் சேர்த்துக் கொண்டு அறுபது பொன் சம்பளம் தருகிறுர் கள். அவனை வளர்த்த வண்ணாத்திக்கு அஞ்சு ஏக்கர் நிலத்தை மானியமாகத் தருகிறார்கள். எல்லாவித வசதிகளோடும் மெச்சும் பெருமாள் இன்பமுடன் அரண்மனையில் வசிக்கிறுன். ராசபாளை யத்திலின்றும் இரு நாய்களை வரவழைத்துக் கொண்டு நன்ருக காவலும் செய்கின்றுன்.

வண்ணாத்தியின் 'மகனது' திருமணத்துக்கு வந்த மெச்சும் பெருமாள் மணப்பெண் மீது காதல் கொள்கிறான். இருளியிடம் போய் எப்படியாவது அப்பெண்ணோடு கூடியிருக்க ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகிறான். வண்ணாத்தியும் வேண்டிய வழி முறைகளையும், வசதிகளையும் செய்து தருகிறாள். மன்மதனும் ரதியும் போல் மெச்சும் பெருமாளும் இருளியின் மருமகளும் மருவி விளையாடுகின்றனர். இக்கதை தொடர்கிறது.

உக்கிரங் கோட்டையில் பொன்னும் பெருமாள் தேவரும் அவரது மனைவியும் மாண்டுவிட, இரு பெண்களையும் சங்கர பாண்டியத்தேவரே பாதுகாத்து வருகின்றார். அவ்வூரில் தீராத வழக்கொன்று. அதை மெச்சும் பெருமாள் தீர்த்து வைக்கிறான் வழக்குக்கு வந்த சங்கரபாண்டியன் வண்ணாத்தியைச் சந்தித்த போது அவள் மெச்சும் பெருமாளின் பழைய கதையைச் சொல்லி ஒரு சிக்கலையும் தீர்த்து விடுகிறாள். மனமகிழ்ந்த சங்கரபாண்டியன் இருபெண்களையும் கொண்டு வந்து மெச்சும் பெருமாளிடம் ஒப்படைத்துவிடுகிறார். தம்பி தன் தமக்கைகளோடு ஒருபுதுவாழ்வைத் தொடங்குகிறான்.

பருவம் அடைந்த இரு தமக்கைகளையும் பொருத்தமான இருவர்க்குத் திருமணம் செய்துவைக்கின்றான். என்றாலும் அவர்களையும் தன்னோடு, தன் வீட்டோடு வைத்துக் கொண்டு இனிதான வாழ்வை இடையூறின்றி கழித்து வருகின்றான்.

மீண்டும் ஒரு பஞ்சம் ஆரம்பமாகிறது.காஞ்சிபுரத்து மறவர்கள் கொள்ளையடிக்கத் திட்டமிடுகின்றனர். தென்னாடுதான் அவர்களுக்குத் திருட்டுக்களம் ஆகின்றது. கறுப்புசாமியின் தலைமையில் பதிமூன்று பேர் அடங்கிய ஒரு கொள்ளைக் கூட்டம் தென்னாடு அடைகின்றது. முன்னீர் பாளையத்தில் வீரபத்திரத் தேவர் கொடுத்த துப்பின்படி அவர்கள், கோபால சமுத்திரத்தில் பள்ளிருட தாவளத்தில் கொள்ளையிடுகின்றனர்-குலவையிடுகின்றனர்! குலவைச் சத்தம் கேட்ட மெச்சும் பெருமாள், கொள்ளையர்களைக் கொன்றுகுவித்து ஏழு கிடாரத்திரவியத்தையும் மீட்டுவிடுகிறான். ஒருகொள்ளையன் மட்டும் தப்புகிறான் செய்தியை அறிந்த குடும்பக்கமார்கள் மகிழ்ச்சியுடன் மெச்சும் பெருமாளைப் போற்றுகின்றனர். பரிசளிக்கின்றனர்.

பாண்டிய மன்னர்கள் இந்தச் செய்தியைக் கேட்ட போது மெச்சும் பெருமாள் மீது கோபம் கொள்ளுகின்றனர். அவனை அரண்மனையினின்றும் விலக்கி வைக்கின்றனர். என்றாலும் அவனது வேண்டுகோளுக்கிணங்கக் காவல் உரிமையை அவனுக்கு

மட்டுமே பட்டயமெழுதிக் கொடுக்கின்றனர் மெச்சும் பெருமாளின் காவலில் நாடு செழிக்கிறது.

இருசால் பணத்தை அம்பாசமுத்திரத்தில் கொண்டு போய் கட்டுவது வழக்கம். மெச்சும் பெருமாளுக்குப் பணம் கட்டும் முறை வருகின்றது. கண்ணுவலியின் தொந்தரவு இருந்தபோதிலும் கடமையுணர்வுடன் அம்பா சமுத்திரம் போய் பணத்தைக் கட்டிவிடுகிறான்.

திரும்பும் வழியில் திருடர் கூட்டம் மீண்டும் குறுக்கிடுகிறது. எல்லாரையும் கொன்று விட்டோம் என்ற நிறைவில்—நினைவில் இருக்கும் போது தப்பிய ஒருவன் மட்டும் ஒளிந்து வந்து வேலால் விலாவைத் துளைத்து விட்டான். வீழ்ந்த வீரனின் நாய்கள் அவனை அவனது சடலத்தை- பாளையங்கால் தண்ணியிலே இழுத்து வந்து மாதேரு முக்கிலே கிடத்துகின்றன. ஒரு நாய் ஓடிப்போய், அவனது தமக்கையரை அழைத்து வர, அக்காமார்கள் அழுது புலம்புகின்றனர் அரசனது உதவியால், அரண்மனை நெருப்பு மூலம் அவனை எரித்து விடுகின்றனர். நாய்களும் அவனோடு தீயில் குதித்து சாம்பலாக மூவரும் வீர சொர்க்கம் அடைகின்றனர்.

இவனைச் சிறந்த அழகன், ஆற்றல்மிக்க வீரன், கல்விமான், கடமை தவறாதவன், பாசமிக்க சகோதரன், பண்பு மிக்க சான்றோன் என்று பலவாறு குறிக்கலாம். இவனிடம் உள்ள ஒரே ஒரு குறை — பெரியகுறை பிறன்மனை நயத்தல்தான். இது இவனது புகழுக்கு ஒரு களங்கம். அச்சமுதாய அமைப்பில் இது ஏற்றுக் கொள்ளலாம் — என்று காரணம் காட்டினாலும் இது நிலவின் கறை, நீரின் நுரை, நிலைத்த வடு என்பது மட்டும் உண்மை.

"முன்னழகைக் கண்டவர்கள் மோகிப்பார் ஆயிரம்பேர்
பின்னழகைக் கண்டவர்கள் பிரமித்து நின்றிடுவார்.
அள்ளித் தெளித்தது போல் அங்கமெல்லாம் தேமல்களும்"

(986—963)

இவனைச் சிறந்த அழகன் என்று சித்தரிக்கின்றது.

"கூடுவிட்டு கூடுபாய்வான் குறளிவித்தை தானுமுண்டு
மையுமுண்டு சிமிழுமுண்டு மயக்குவித்தை பாடமுண்டு
மூலையிலே இருக்கும் பெண்ணை முத்தத்திலே வர
வழைப்பான்
அடுக்களையில் இருக்கும் பெண்ணை அம்பலத்தில்
வரவழைப்பான்

சுளவு தட்டிப் பறக்க வைப்பான் தொண்ணூறு காதவளி
உரலைப் பறக்க வைப்பான் ஒன்பது காதவளி" (956—975)

என்ற செய்திகள் இவன் கற்ற வித்தைகளைக் காட்டுவன.

" தலைவருடைய வழக்கையெல்லாம் தான் முடித்தார் பாண்டியரும்
தீராத விவகாரத்தைத் தீர்த்தாராம் பாண்டியரும்."

என்ற அடிகள் இவனது நீதிவழங்கும் நேர்மையைக் காட்டுகின்றது. உக்கிரன் கோட்டையில் தீர்க்கப்படாமல் திண்டாடிய — திக்குமுக்காடிய விவகாரம் மெச்சும் பெருமாளால் ஒரே நாளில் தீர்த்து வைக்கப்பட்டது.

தமக்கையர்களின் மீது இவனுக்குப் பாச உணர்வு அதிகம். எனவே, மிகுந்த கவனமுடன் இருவருக்கும் மணமுடித்து வைக்கின்றான். கொளுமடை ஊருக்குப் பெண் கொடுக்க வேண்டுமெனில் மாப்பிள்ளை கோபால சமுத்திரத்தில் வந்து வாழ வேண்டும் என்று நிபந்தனை போடுகிறான். ஊர்மெச்ச, உறவு மெச்ச தமக்கையர்களின் திருமணத்தைத் தடபுடலாக நடத்துகிறான்.

கள்ள நாட்டாரின் குலவைச் சத்தம் கேட்டதும் தன் நாய்களோடு விரைந்து செல்கிறான் மெச்சும் பெருமாள்.

"சிங்கம் போல பாய்ந்தாரம்மா சீமான் அந்த பாண்டியனும்
பூனை போல் பதுங்கலுற்றார் புலிப்பாய்ச்சல் பாயலுற்றார்
பதிமூன்று பேர் கள்ளர்களைப் பாய்ந்து வெட்டலுற்றார்.
உற்றதொரு கள்ளர்களை ஓடி ஓடி வெட்டலுற்றார்."

என்று புலவர், பெருமாளின் வீரச்செயலை வருணனை செய்கின்றார்.

கடமையுணர்விலும் பெருமாள் பாண்டியன் சிறந்து விளங்குகின்றான். கண்ணுவலியின் தொந்தரவையும் தாங்கிக் கொண்டு அம்பைக்குப் பகுதிப் பணம் கட்டுவதற்குப் போகின்றான். புறப்படும் போது சில தீய சகுனங்கள் தோன்றுகின்றன. தமக்கையர் தடுக்கின்றனர்.

" என்புத்தி கேட்டவர்கள் கோடியுண்டு
பெண்புத்தி கேட்டுப் பிழைப்பதுண்டோ?" (2130—31)

என்று மறுத்து, மீறிச் செல்லுகின்றான்.

சிறந்த பக்திமானாகவும் விளங்குகின்றான். அம்பைக்குப் புறப்படுவதற்கு முன்னால் தெய்வங்களை வணங்கி விட்டே செல்லுகின்றான்.

" காளிகா தேவியரைக் கையெடுத்து வணங்கிக் கொண்டு
முப்பிடாதி அம்மாளை முடிவணங்கித் தெண்டனிட்டார்"
(2142—45)

என்று இவனது பக்தியைக் காட்டுகின்றார் புலவர். பிறன்மனை நயக்க வண்ணாத்தி வீட்டுக்குச் செல்லும் போது கூட

" துர்க்கை என்ற காளிகோவில் சுற்றிவந்து தெண்
டனிட்டார்." (1271—72)

என்று குறிப்பிடுகின்றார்.

பெருமாள் பாண்டியனிடம் உள்ள பெரிய பலவீனம் வண்ணாத்திப் பெண்மீது ஆசைகொண்டது — அடைய முற்பட்டது — அடைந்து கொண்டது.

" மருமகளும் நானுமிங்கே மருவி விளையாடனுமே
மன்மதனும் ரதியும் போல் மகிழ்ந்து விளையாடனுமே"
(1151—54)

என்று தன் ஆசையை, வளர்த்த வண்ணாத்தியிடமே கூறுகிறான். அவளும் தக்க ஏற்பாடுகளைச் செய்கின்றாள்.

" வேண்டுமட்டும் விளையாடி வெற்றிலையும் தின்று துப்பி
விடியவொரு சாமத்திலே வெண்கோழி சத்தம்கேட்டு"

தனது அரண்மனைக்குப் புறப்படுகின்றார். இக்கதை அனுதினமும் தொடர்கின்றது. கதையின் படி கள்ளநாட்டாரிடம் இருந்து ஏழுகிடாரத்திரவியங்களை மீட்பது வரை மெச்சும் பெருமாள் வண்ணாத்தி வீட்டுக்குப் போய் வருகிறார்.

இவ்வாறு மெச்சும்பெருமாள், கதைத் தலைவனுக்குரிய அனைத்து குணச்சிறப்புகளையும் பெற்று விளங்குகின்றான்.

### வரலாற்று விளக்கங்கள்

இக்கதையினின்றும் வரலாற்றுக்கு உதவக் கூடிய சில செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.

1. வீரக்கேரளா ராசாவும் வீரமார்த்தாண்ட ராசாவும் மதுரையினின்றும் புறப்பட்டு வந்து சுவேத மகாரிசியின் உதவி

யுடன் மூங்கில் வனத்தில் நகரமைத்தனர். அந்த நகரமே சக்கர நகரமென்றும், பின்னர் ராசகோபால சமுத்திரம் என்றும், இன்று கோபால சமுத்திரம் என்றும் மருவியுள்ளது.

2. நகர் காவலுக்கு மறவர் இனத்தைச் சார்ந்தவர்களே நிய மிக்கப் பட்டனர். அவர்கள்தான் காவல் மறவர்களாகவும், தலையாரிகளாகவும் மன்னர்களின் அரவணைப்பில் இருந்தனர். இக்கதையில் பொன்னும் பெருமாள் தேவர் தலையாரி பதவியையும், பெருமாள் பாண்டியன் காவல் உரிமை பட்டயத் தையும் பெறுகின்றனர்.

3. பஞ்சகாலத்தில் கள்ளநாட்டார் கொள்ளையிடுவதற்காக தென்னாடு முழுவதும் அலைந்தனர் என்ற செய்தியையும் அறிந்து கொள்ளுகின்றோம். ஆகவே, கொள்ளைக் காரர்களாக இருந்ததும் மறவர் இனம்தான். காவல்காரர்களாக இருந்ததும் மறவர் இனம் தான். இது ஒரு வரலாற்று வேடிக்கை.

4. தண்டனைகள் எவ்வெவ்வாறு அளிக்கப்பட்டன என்ற செய்தியையும் இக்கதை நமக்கு விளக்குகின்றது. பகுதிப்பணம் கட்டாதவர்களை அட்டைக்கிடங்கில் இறக்குவதுண்டு. ஒரு கிடங்கு தோண்டி, உள்ளே அட்டைகளை நிரப்பிவிடுவர். இவ் வட்டைகள் மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதற்குத் தயாராக இருக்கும். இதை,

" அட்டைக் கிடங்கினிலே அருங்கிளியே இறக்கிடுவார்
அட்டை பிடுங்கிடுமே ஆயுளுக்கே மோசம் வரும் (603—8)

என்று விளக்குகின்றார். குனிய வைத்து முதுகின் மேல் கல்லினை ஏற்றுவதும், பட்டினி போடுவதும் உண்டு.

''முதுகின் மேல் கல்லேத்தி மூர்க்கமுடன் நிறுத்திடுவார்''
(603-6)

"பகுதி கட்டாத பேர்களைத்தான் பட்டினி
போட்டதுண்டு (617-18

என்று இவ்வாறு தண்டனைகள் கூறப்படுகின்றன.

5. மானியம் அளித்தலையும் இக் கதையால் அறிந்து கொள்ளு கின்றோம். ஒருவரது உதவியை மெச்சியோ, செயலைப் பாராட் டியோ இம்மானியங்கள் அளிக்கப்படுவதுண்டு, வெகுமதியினின்றும் வேறுபட்டது இது.

''நஞ்சை நிலம் மானியம்தான் நலமுடனே தரப்போறார்'' (930-31)

என்று சோதிடர் சொல்லவும், மன்னன் அவளுக்கு 5 ஏக்கர் நிலத்தை மானியமாக அளிக்கின்றார்.

6. ஓர் உரிமையைப் பட்டயம் எழுதிக் கொடுக்கும் வழக்கத்தையும் இக்கதையால் அறிந்து கொள்ளுகின்றோம். மெச்சும் பெருமாள் தனது காவல் உரிமையைப் பட்டயமாக எழுதிக் கேட்கிறான், பாண்டிய மன்னரிடம்.

"ஆயிரம் வருசத்துக்கு அழியாமல் இருக்க வேண்டும்
பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் பேர் சொல்ல வேணு
மென்றார்
செம்பு நல்ல பட்டயத்தில் திசை எழுதித் தரவேண்டும்"
(2014—19)

என்று வேண்டியபோது, மன்னனும் கம்மாளரை அழைத்து வந்து கட்டுடனே எழுதிக்கொடுத்தார் என்று அறிகின்றோம்.

7. மரியாதைக்குரியவர்கள் இறந்து விட்டால் அவருக்கு ராச மரியாதை உண்டு. இறப்புச் சடங்குக்குத் தீ மூட்ட அரண்மனைத் தீ கிடைக்கும். இக்கதையில் பெருமாளின் தமக்கையர் மன்னனிடம் தீ கேட்கின்றனர்.

"அரண்மனை நெருப்பதுதான், அடியாளுக்கு வேண்டுமென்று" (2466-67) தமக்கையர் கேட்டபோது மன்னனும் மனமுவந்து செய்கிறான் இதுபோல் முத்துப்பட்டன். இறந்ததும் அவனதுமனைவியர் சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் போய் தீ கேட்கின்றனர்.

8. கோபால சமுத்திரத்தில் பிரிக்கப்படும் இறுசால்பணத்தை அம்பா சமுத்திரத்தில் கொண்டு போய் கட்டி வந்தனர் என்ற செய்தியையும் இக்கதையால் அறிய முடிகின்றது. பணம் கட்ட ஆபீசும், பணம் கட்டியதற்கான சீட்டும் இருந்தது என்றும் அறிகிறோம்.

இவ்வாறு வரலாற்றுக்கு உதவும் பல்வேறு செய்திகளை இக்கதை நமக்கு இயம்புகிறது.

## சமுதாயச் செய்திகள்

சமுதாயச் செய்திகளில் மக்களின் பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் அடங்கி விடுகின்றன. மக்களிடம் கொண்ட இத்தகைய பழக்கங்களை இது போன்ற கதைப்பாடல்கள் விவரிப்பது வழக்கம். இக்கதையிலும் சில சமுதாயச் செய்திகள் சித்தரிக்கப்படுகின்றன.

1. சோதிடர்கள் மக்கள் வாழ்வில் பெரும்பங்கை வகுத்திருக்கின்றனர். சங்கரவடிவம்மாள் பொன்னும் பெருமாள் தேவர் குழந்தையில்லை என்று சொன்னதும் சோசியரை வரவழைக்கின்றார். அவரிடம் காரணம் கேட்ட போது அவர் பிள்ளையது வேண்டுமானால் பெருந்தவசு செய்ய வேண்டும், (270-71) என்று கூறுகிறார் குழந்தையும் பிறக்கிறது அதற்கு பேரிடவேண்டுமென்று எண்ணிய போது மீண்டும் சோதிடரை வரவழைக்கின்றனர்வளத்தராக்கி என்று பெயரிடுகின்றனர் ''பிள்ளை பிறந்தநேரம் பூமிக்கே ஆகாதே (415-20) ஏழு நல்ல வயதிலேதான் இந்த ஊரை விட்டுப் போகனுமே ''(440 41) என்று சொன்னார். அவ்வாறே நடந்தது. மெச்சும் பெருமாளை வண்ணாத்திஎடுத்து வளர்க்கிறாள்அவனைப் பள்ளிக் கூடம் அனுப்ப வேண்டும் என்று ஆசைபடும் போது சோதிடரை அழைத்துக் கேட்கிறாள் 'மூத்தமகன் சாதகத்தில்' முட்டாளாய்த் தானிருப்பான்'' (90903) என்று மூத்தமகனுக்கும் கம்பெடுத்து காவல் செய்வான் கடவுள் என்று மதிப்பார்கள் என்று இளைய மகனுக்கும் சோதிடர் சாதகம் பார்த்துக் கூறுகிறார். அவ்வாறே நடக்கின்றது இவ்வாறு சோதிடர்களின் மீது அதிக நம்பிக்கை வைப்பதைப் பார்க்கிறோம்.

2. குழந்தைப் பேற்றுக்குத் தானமும், தவமும் மாதாந்தமும் பயன்படும் என்று நம்பினர். பொன்னும் பெருமாள் தேவரும் அவரது மனைவியும் சங்கரன் கோவிலுக்கு மாதாந்தம் நடந்தனர், 'தூரவழி போவார்க்குச் சுமை தாங்கி கட்டி வைத்தார் காதவழி போவார்க்குக் கல்கிணறு கட்டி வைத்தார்.'. (292-95) ஆண்டிபரதேசியர்க்கும் அன்னமடம் கட்டி வைத்தார்'', இலையிலே சாதமுண்டாஸ் என்ன தவம் என்று சொல்லி தரையை நல்லதா மொழுகி சாதமுண்டார் இருபேரும் (300-305).

3. மக்களிடம் உள்ள தெய்வ நம்பிக்கையையும் இக்கதை தமக்கு தெளிவாக்குகின்றது சுவேதமகாரிசி கைலாயம் சென்று சிவபெருமானை வணங்கிவரம் கேட்கிறார் பெருந்தவசு செய்வதற்காகப் பிள்ளையாரையும் தன்னோடு மூங்கில்வனத்துக்கு அழைத்து வருகிறார்- வழிபடுகிறார் சக்கர நகரத்தை நிர்மாணம் செய்து கோட்டை கட்டும் போது ஒரு சிவன் கோயிலையும் மதுரைப் பாண்டியர்கள் கட்டுகின்றனர். குடும்பக்கமார்கள்வந்து குடியேறிய போது காளி கோவில் ஒன்று கட்டி அதற்கு முப்பிடாதி அம்மன் என்று பெயரிடுகின்றனர்.

4. கிராம தெய்வங்களுக்குக் கொடைகொடுக்கும் வழக்கம் இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்பாக விளங்குகின்றது

இக்கதையில் சங்கரவடிவம்மாள் பிரசவ வேதனையால் துடிக்கும் போது "நம்ம குலதேவதைக்குக் கொடைகொடுக்க நேர்ந்திடுங்கோ (374-75) என்று வேண்டுகின்றார். இவ்வாறு நேர்ந்து கொள்வதால் பலன் கிட்டும் என்பதும் மக்கள் நம்பிக்கை.

5. மாண்டவர்களுக்கு அவர்களின் நினைவாக மாலை வைப்பது ஒரு வழக்கம். இவ்வாறு மாலை வைப்பதால் மாண்டவர்களின் ஆவி மகிழ்ச்சியுறும் தான் வேண்டுவதை நிச்சயம் தந்து உதவும் என்றும் நம்புகிறார்கள். சங்கரவடிவம்மாள் தன்னுடைய பிரசவ வேதனையின் போது "மாண்டு மடிந்தவர்க்கு மாலை வைக்க நேர்ந்திடுங்கோ" (376-77) என்று வேண்டுகிறாள்-

6. தலையெழுத்தின் மீதும் அதன் விதி மேலும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் "என் தலை விதிதான் எப்படியோ ஈசன் பகவானே" ("380-81) என்று சங்கரவடிவம்மாள் துயருறுகின்றாள் 'தலையில் எழுதினது, தப்பாதே ஒரு நாளும்' (952-53) என்று பொன்னும் பெருமாள் ஆறுதல் கூறுகின்றார்.

7. சகுனங்கள் மீது மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தனர் சகுனங்களில் நல்ல சகுனம், தீயசகுனம் என்று இரு வகை உண்டு.

1. தலைவாசல் வார போது, தட்டுதடா நடையதுதான் (642-43)

2. முடுக்கத்திலே வாரபோது முடப்பூனைக் குறுக்கிடுமாம் (646-47)

3. ஆந்தை வந்து அலறிடுமாம் அபசகுனம் ஆகிடுமாம். (643-49)

4, சண்டாளி கண்ட கனா சங்கடமாய் தெரியுதப்பா(2122-23) ஆகியவை தீய சகுனங்கள் எனக் கருதப்படும். கெங்கைதாண்டி வாரபோது கெருடனைத்தான் கண்டாளே (796-97) என்று சொல்வது நற்சகுனம்.

8. சமுதாயத்தில் அடைக்கலம் கொடுக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது. பிழைக்கப்போன பொன்னும் பெருமாள் தேவருக்குச் சங்கர பாண்டியன் அடைக்கலம் அளிக்கிறார்.

9, கோழி கூவும் நேரம் (482), விடிந்து ஒருசாமம் (988), அத்த சாமம்(624)என்று நேரங்களைக் குறிப்பிட்டு வந்தனர் என்பதையும் அறிகிறோம்.

வளம் தரு வீதியிலே...

# ஏற்றுமதித் துறையில் ஏற்றமிகு சாதனை

இந்தியாவின் ஏற்றுமதி ரூ. 3,300 கோடியை எட்டியுள்ளது. 10 ஆண்டு களுக்கு முன் இந்த அளவு ரூ. 805 கோடிதான்.

இந்தியப் பொருள்களுக்கு வெளி நாடுகளில் புதுக் கவர்ச்சி ஏற்பட் டுள்ளது. அதற்கு தர நிர்ணயம் பெருமளவில் உதவியுள்ளது. எஞ்ஜி னியரிங் சாதனங்களின ஏற்றமிகு ஏற்றுமதிச் சாதனையால் கடந்த வருடம் ரூ. 353 கோடி அந்நியச் செலாவணி கிடைத்தது.



நெஞ்சில் உரமும்
செயலில்
திறனும் உறுதுணை
நிற்கும்

davp 75/499


வளம் தரு வீதியிலே...
தேவைப் பொருள்கள் மீதான வரி மேலும் குறைகிறது
கட்டம் கட்டமாக சர்க்கரை, தீப்பெட்டி, காலணிகள் போன்ற அன்றாடத் தேவைப்-பொருள்கள் மீதான சுங்கவரி குறைக்கப்படுகிறது. 1951-ல் 46 சதவிகிதமாக இருந்த வரி இன்று 17 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு முன்கூட இப்பொருள்கள்மீது 31 சதவிகித வரி விதிப்பு இருந்தது.
நெஞ்சில் உரமும்
செயலில் திறனும்
உறுதுணை நிற்கும்
davp 75/451

10. பள்ளிக் கூடத்திலே அரிச்சுவடி, எண்சுவடி, குழிப் பெருக்கம், கொன்றைவேந்தன், பசுக்கதை, பாரதம், பதினெட்டு ராமாயணம் போன்றவற்றைச் சொல்லிக் கொடுத்தனர் என அறி கிறோம்.

11. சிலம்பப் பள்ளி இருந்தது என்பதையும், வேறு பல வித்தைகளும் பயிற்றுவிக்கப்பட்டன என்பதையும் அறிந்துகொள் கிறோம். கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை, குறளி வித்தை, மயக்கும் வித்தை, அம்மியூரும் வித்தை, உரலைப் பறக்க வைக்கும் வித்தை, போன்று பல்வேறு வகை வித்தைகளைப் பெருமாள் பாண்டியன் பயின்றார்.

12. ஆடை அலங்காரங்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்ப தையும் இக்கதை நமக்கு விளக்குகின்றது. மெச்சும் பெருமாள் பாண்டியன் அரண்மனைக்குப் போகும்போது,

"கச்சை வரிந்து கட்டி, கருங்கச்சை சுங்கலிட்டு
முன்புறத்துச் சுங்கலிலே மோகினியாள் சக்கரமாம்
பின்புறத்துச் சுங்கலிலே பிரமதேவன் அச்சரமாம்
வடதுபுறம் சுங்கலிலே வடமலையான் அச்சரமாம்
இடதுபுறம் சுங்கலிலே ஏமனுட சக்கரமாம்
சந்திரகாந்தி பொட்டுகளாம், சர்வத்துப்பட்டு
வல்லவட்டாம்" (1030—1041)

என்று அவரது ஆடை அலங்காரங்கள் வருணனை செய்யப்படு கின்றது.

இவ்வாறு சமுதாயச் செய்திகள் பல, இக்கதை மூலம் நமக்கு அறிய வருகின்றன.

## இலக்கிய மரபுகள்

நாட்டுப்புற இலக்கியங்களுள் கதைப் பாடலும் ஒன்று. கதைப் பாடல்களுள் வில்லுப் பாடலும் ஒன்று. இதற்கென்று ஒரு இலக் கிய மரபுண்டு. இவ்விலக்கிய மரபின்படியே "மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை" என்ற வில்லுப் பாடலும் அமைந்துள்ளது.

1. நாட்டு வளம் பாடுவது இக்கதையிலும் உண்டு. தென்னாட் டைப்பற்றி வருணனை செய்யும்போது,

"நாட்டிலேயும் நல்ல நாடு, நாவலர்கள் புகழும் நாடு,
சிறுகதலி பழுக்கும் நாடு, செந்நெல் கன்னல் விளையும் நாடு,
தேங்காய் அமிர்தம் சோலை சூழும், தென்னாடு
தேசத்திலே" (1—7)

என்று பாடி மகிழ்கின்றார்.

2. கதைப் பாடல்களில் சில, கைலாயத்தினின்றும் கதையைத் தொடங்குவது வழக்கம். கதையின் தலைவன் தெய்வ அருளால் பிறந்தவன் தெய்வமாகப் போகிறவன் என்பதைக் காட்டவே இவ்வுத்தியைக் கையாள்கின்றனர். இக்கதையில் சக்கர நகரம் அமைப்பதும், வரம் பெறுவதும் சிவபெருமான் அருளால்தான்.

"மாங்காய் அமிர்தம் சோலை சூழும், மாணிக்க வட
கயிலையிலே
பரமசிவனும் பார்வதியும், பார்த்து வரம் வாங்க
வேணும்" (14—17)

என்ற எண்ணமே ரிசியை கைலாயம் செல்லத் தூண்டுகின்றது.

3. இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் கதைப் பாடல்களில் இடம் பெறுவதுண்டு. இதுவொரு சமுதாயக் கதைப் பாடல் என்றாலும் கூட இதில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பல உள்ளன. ரிசி கைலாயம் செல்வதும், அங்கு அம்மையப்பனைக் காணுவதும், அவர்களோடு பேசுவதும், வெள்ளைப் பிள்ளையாரைத் தன்னோடு அழைத்து வருவதும், அவரோடு உரையாடுவதும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளே: பொன்னும் பெருமாள் தேவர் தனது பாலகனுக்குப் பெயரிடவேண்டுமென்று எண்ணியபோது அசரீரி வார்த்தையான "மெச்சும் பெருமாள்" என்று மேன்மையுடன் சொன்னதாக வருவதும் இயற்கை இறந்த நிகழ்ச்சியே. சீவகனுக்குப் பெயரிடும் போதும் ஒரு தெய்வம் இவ்வாறே கூறியது ஒப்பிடத் தக்கது.

4. கதைப் பாடல்களில் கோட்டை கட்டுவது நிச்சயம் பேசப் படுவதுண்டு. இக்கதையிலும் பாண்டியர்கள் சக்கர நகரத்தை அமைத்து அதில் கோட்டை கட்டுகின்றனர்.

"சுத்துகட்டு மாளிகையாம், சூழவொரு அங்கணமாம்,
கோட்டைகளும் கொத்தளமும், கோபுரமும் துறவிகளும்,
ஆசார வாசல்களும், அதிகார மேடைகளும்
ஆனைக்கட்டும் சாவடியாம், அசுவம் கட்டும் கொட்டகையாம்
குதிரைக்கட்டும் சாவடியும், கொட்டார வாசல்களும்.
துர்க்கை என்னும் காளி கோவில், துரிதமாகக் கட்டி
வைத்தார்," (152—163)

கட்டபொம்மன் கதைப் பாட்டிலும்: ஐவர் ராசாக்கள் கதையிலும் கோட்டை கட்டுவது இதுபோன்று அமைக்கப்படுகின்றது,

5, பிள்ளையில்லாமல் இருப்பது, இறைவனை வேண்டுவது, தானமும் தவமும் செய்வது, பிறகு கருவுறுவது, கருவின் பத்துமாத

வளர்ச்சி, பிள்ளைப்பேறு, சடங்கு போன்ற நிகழ்ச்சிகள் எல்லா கதைப் பாடல்களிலும் ஏறக்குறைய காணமுடிகின்றது, காரணம் அவர்களின் நோக்கம் கதைத் தலைவனின் பிறப்பும் சிறப்புக்குரியது என்பதை காட்ட விரும்புவதே.

6, ஒரே அடிகள் மீண்டும் மீண்டும் வருவது உண்டு. இக் கதைப் பாடலில்,

''முத்துபோல் கண்ணீரை, முகமெங்கும் சோரவிட்டாள்.
பவளம்போல் கண்ணீரை' பக்கமெல்லாம் சோரவிட்டாள்.''
(246—9)

என்ற கூற்று நான்கு இடங்களில் வருகின்றது. அது முறையே (384—7) (708—11) (2374—7) ஆகிய அடிகளாகும்.

7. சில அடிகளில் ஒரே பொருள் அடுத்தடுத்து வெவ்வேறு வார்த்தைகளில் வலியுறுத்தப்படுவதுண்டு.

''கருவா ஜனிக்கையிலே, கருமருந்தைத் தின்றேனில்லை,
உருவா ஜனிக்கையிலே, உள் மருந்தைத் தின்றேனில்லை''
(519—22)

என்று ஒரே கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

8. ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு ஒருவர் செல்லும் போது இடையிலுள்ள ஊர்களின் இடங்களின் பெயர்களையெல்லாம் சொல்வதும் மரபு. பெருமாள் பாண்டியன் அம்பாசமுத்திரம் செல்லும்போது,

''கீழ்ச் சேவல் பாலம் விட்டு, இளுவடித்துறை கடந்து,
தேசமாணிக்கும் விலக்கும் விட்டு, சிவந்தி பாலம் தான்கடந்து
சேரன் மகாதேவியிலே, அப்பன் கோவில்தான் கடந்து,
வீரகம் பதியும் விட்டு, வெள்ளாங்குழி நாடும் விட்டு
அம்பா சமுத்திரம் வந்தல்லவா.''

என்று இவரது வழிப் பயணம் வருணிக்கப்படுகின்றது.

9. கதைப் பாடல்களில் வினாக்கள் தொடங்கு முன்னால் விடை சொல்லும் முன்னால்,

''எங்கிருந்து இங்கு வந்தீர்
எந்த ஊர் எந்த தேசம்?''
(750—51)

"வாருமையா சோதிடரே
வார்த்தையொன்று சொல்லக் கேளும் (892—93)

என இவ்வாறு கூறுவது மரபு.

10. வாக்கிய அமைப்பைக் கதைப் பாடல்களில் கூர்ந்து நோக்கும்போது சில தனித் தன்மைகள் புலனாகின்றன.

"என்று சொல்லும் நேரத்திலே, ஏது சொல்வார்
பாண்டியரும் (152—53)

என்று லாவகத் தொனியில் வாக்கியங்கள் அமைவதுண்டு. 'தான்' என்ற சொல் தேவையில்லாமல் பொருளுக்காக அல்லாமல் ஓசைக்காக, இசைக்காக வருவதுண்டு. "பந்தலிட்ட வாசலிலே, பார வாழைதான் நிறுத்தி" (1545—46) என்ற அடிகளில் 'தான்' என்பது இசைக்காகவே வருகின்றது. இதுபோன்று 'நல்ல' என்ற சொல்லும் இவ்வாறு வருவதுண்டு, "பஞ்ச நல்ல காலத்திலே', (585) என்ற அடியில் நல்ல என்பது இசைக்காக வந்ததே.

11. கதையை முடிக்கும்போது சுபமாக முடிப்பது வழக்கம். இக்கதையில் பெருமாள் பாண்டியன் மாண்டு சோகமாக முடிந்தாலும்,

"மாண்டு மடிந்தார்கள். வைகுந்தம் சேர்ந்தார்கள்
தெய்வப் பிறப்பாகச் சிருஷ்டித்தார் பகவானும்" (2524— 27

என்று சிறப்பாக முடிகின்றது.

## முன்னுரையின் முடிவில்

என் கையில், இக்கதைப் பாடல் காகித ஏட்டின் வடிவிலேயே கிடைத்தது. அதை அப்படியே படி செய்து கொண்டேன். சிறு தலைப்புகள் மட்டுமே நான் செய்தது. மற்றவை எல்லாம் மயிலேறி அவர்கள் பாடிய படியே அமைந்திருக்கின்றன. எவ்வித மாற்றங்களும் இல்லை.

சத்தியார்த்தி அவர்கள் ஒரு முறை கூறும்போது. "நம் இந்தியாவில் 40 கோடி மக்களுக்குமேல் வாழ்கிறோம். இதில் இருபது கோடிக்கு மேல் கிராமத்து மக்களே. ஆளுக்கு ஒரு பாடல் சேகரித்தால் போதும். அழிந்துபோகும் நாட்டுப்புற இலக்கியத்தை அழியாமல் காத்து விடலாம்," என்று குறிப்பிட்டார். மாபெரும் புலவர்கள் கூட சாதிக்க முடியாத சிலவற்றை இந்த நாடோடிக் கவிஞர்கள் சாதித்து விடுகிறார்கள். அவர்களில் சாதனைகள் மண்ணில் மறையாமல் மனதில் நிலைக்க வேண்டும் என்பது என் ஆசை மட்டுமல்ல ஆர்வமுள்ள என் ஆராய்ச்சியும், கூட. எனவே தான் திருநெல்வேலி மாவட்டத்துள்ள பல ஊர்களுக்கும் சென்

றேன். பல்வேறு வகையானபாடல்களைச்சேகரித்தேன். அப்போது தான் நான் 'மெச்சும் பெருமாள் பாண்டியனையும்' சந்தித்தேன்.

இக்கதைப் பாடலை மகிழ்ச்சியுடன் தந்த புலவர் மயிலேறி அவர்களுக்கும் அவர் தருவதற்காக எனக்குச் சிபாரிசு செய்து தந்த என்னருமை மைத்துனர் பெருமாள் பாண்டியன் அவர்களுக்கும் நான் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன். என் ஆய்வுத் தீ எரிய இவர்கள் அன்பு நெய் ஊற்றுவதை என்னால் என்றும் மறக்க இயலாது.

இக்கதைப் பாடலோடு இன்னும் சில கதைப் பாடல்களையும் தந்து விட்டு புலவர் மயிலேறி அவர்கள் என்னிடம் சொன்னது இன்றும் என் நெஞ்சில் ஒலிக்கின்றது. அவர் சொன்னார்; ''என்னிடம்எவ்வளவோ இருந்தன.எல்லாம் அழிந்து விட்டன. இருப்பதோ கொஞ்சம். இவைகளும் அழிவதற்கு முன்னால் யாரிடமாவது தர ஆசைப்பட்டேன். என்னோடு இவைகளும் அழிவதற்கு முன்னால் இதை இவ்வுலகம் அறியச் செய்யுங்கள்'' என்றார். நானும் ஒப்புக் கொண்டேன். என்னால் முடியுமா? என்று நான் அச்சப்பட்ட போது, என்னுடைய பேராசிரியர், என் ஆராய்ச்சியின் மேற் பார்வையாளர், என் பயணத்தில் வழித்தடம், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், டாக்டர் ந சஞ்சீவி அவர்களின் நினைவு எனக்கு துணிவைத் தந்தது.

''ஈனமுத்துப் பாண்டியன் கதை'' என்ற வில்லுப்பாடல் இலக்கியத்தை, மூன்றாவது தமிழாய்வில் வெளியிட்டு ஆதரவு தந்த என் பேராசிரியர், இக்கதைப் பாடலையும் வெளியிட்டு எனக்கு என் ஆய்வுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்திருக்கிறார். அவருக்கு வெறும் நன்றிகளை மட்டும் உதிர்ப்பதைவிட அவரது மாணவன் என்று சொல்லிக் கொள்வதிலேயே மகிழ்வும் மன நிறைவும் கொள்கிறேன்.

சென்னை—5. சு. சண்முக சுந்தரம்

# காலிங்கராயன் கைபீது

தாராபுரம் துக்குடி பொள்ளாச்சி தாலுக்கா [1]ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டன் என்னப்பட்டவருடைய வமிசாவளி முதலான கைபீது என்னவென்றால் :—

## பூர்வீகம்

பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்டை மண்டலத்து வேளாளரென்று பேர் பிரசித்திப்பட்ட நற்குடி நாற்பத் தெண்ணாயிரம் பசுங்குடி பன்னீராயிரம் ஆக அரவதுனாயிர கோத்திரக்காரர்களில் பிற்காலும் ரிஷபகிரிச் சோளராசா மகளை மோரைச் சரிந்த சேரராஜா பாணிகிரகணம் பண்ணிக் கொண்ட படியினாலே சோளராசாவின் மகள் தனக்கு சீதனம் தன் தகப்பனாரைக் கேட்டுக் கொண்ட படியினாலே அந்தச் சமயத்தில் நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் குடியில் எண்ணாயிரம் குடி சீதனம் கொடுத்தபடியினாலே அப்போ வரப்பட்ட வேளாள னுக்கு தென் திசை நோக்கி வந்தபடியினாலே தென் திசை வேளாளர் என்று பேர்வரப் பட்டது.

## கொங்கில் குடியேற்றம்

சேர தேசத்துக்கு வரப்பட்ட வேளாளருக்கு சேரனுக்கு கொங்கரென்றும் பேர் இருக்கிற படியினாலே கொங்கு வேளாள ரென்றும் கொங்கு இருபத்துனாலு நாடு என்றும் ஏற்படுத்தி யிருக்கும் நாளையில் அக் காலத்தில் என் வமிசத்தனான காலிங்க கவுண்டன் என்கிறவன் பூந்துரை நாட்டுக்கு காணியாளனாய் மேல் கரை முப்பத்து ரெண்டு கிராமத்துக்குச் சேர்ந்த வெள்ளோடு குடியிருப்பு காரனுக்குத் தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்

---

1. இதன் பிரதி தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளது. இது அங்கு பிரதி செய்யப்பெற்றது.

வர பாடகவல்லி நாய்ச்சியார் தேவஸ்தானம் சீர்னோத்தாரணம் [1] பண்ணிக் கொண்டு இருந்தான்.

## அணை கட்டக் காரணம்

பூந்துறை நாட்டுக்கு நாட்டானாய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரனாய் இருக்கும் நாளையில் கங்கை குலம் சாத்தந்த் கோத்திரம் காலிங்க கவுண்டன் என்கிற தன்னுடைய குமாரனுக்கு கலியாணம் பண்ண வேணுமென்று நினைத்து மாமன் மச்சுனனான பண்ண குலத்தாளி வீட்டிலே பெண் கேட்டு கலியாணம் செய்யத் தக்கதாக யோசித்து பெண் சம்மதமாகி அந்த ராத்திரி சாப்பிடு கிறதுக்கு சமையல் பண்ணுகிறவன் வந்து இவர்களுக்குச் சமையல் பண்ணுகிறதுக்கு எந்த அரிசி போடுகிறது? என்று கேள்க்க, அவாள் கம்பு விளைகிற சீர்மையிலே இருக்கிற பேர்களுக்கு எந்த அரிசி என்று தெரியப் போகிறது. பழ அரிசி தானே போடு போவென்று சொல்ல அது சேதிஷ்டி காலிங்க கவுண்டன் கேட்டு அவாள் வீட்டிலே சாப்பிடாதபடிக்கு இருந்து நெல்லு விளையும் படியாக நீர் பாங்கு உண்டு பண்ணிக் கொண்டு உங்கள் வீட்டுப் பெண் கொண்டு சாப்பிடுகிரோமென்று சபதம் கோரிக் கொண்டு வந்து தன் ஊரிலே வந்து சேர்ந்து மனதிலே தனக்குத் தோணியிருக்கும் நாளையில் இவர் இஷ்டமான சர்வேசுரரை தன்னுடைய [2] அபீஷ்டம் சித்தியாக வேணுமென்று நினைச்சு இருக்கும் வேளையில் இராத்திரி சொப்பனத்திலே ஒரு விருத்த பிராமண ரூபமாய் வந்து இந்த சர்ப்பம் போகிற வழியாக வாய்க்கால் வெட்டி வைக்கச் சொல்லி காரணமாக சொப்பனமாச்சுது. அந்த சொப்பனமான உடனே கண் விழித்துப் பார்க்குமிடத்தில் ஒரு சர்ப்பம் பிரதிக்ஷசமாக இருந்து தான் கண்டு இருக்கப்பட்ட சொப்பனத்தைக் கண்டு அறிய வேண்டுமென்று நினைச்சு வீடு கட்கு வெளியிலே வந்த சமயத்தில் சர்ப்பம் இவனைக் கண்டு முன்னே நடந்தது. அந்தச் சர்ப்பத்தைத் தொடர்ந்து போய் இந்த வழியாகப் போகுதென்று அடையாளங்கள் போட்டுக் கொண்டு வருகிறபோது கொடுமுடி க்ஷேத்திரத்தில் சர்ப்பம் நின்றது.

## வாய்க்கால்

அந்தச் சர்ப்பம் போன போக்கிலே வாய்க்காலும் வெட்டி வைக்க வேணுமென்று நினைத்து பவானி ஆற்றிலே குறுக்க

1. சீர்னோத்தாரணம்—திருப்பணி
2. அபீஷ்டம்-எண்ணம்

அணை கட்டி வைக்க வேணுமென்கிறதாக நினைத்திருந்த சமயத்திலே பவானிக் கூடல் ஸ்தானத்துக்கு மேல் புறத்தில் பவானி ஆத்துலே சர்ப்பம் குறுக்கே படுத்துக் கொண்டது. அந்த இடத்திலே அணை கட்டி வைக்க வேணுமென்று பவானி கூடலுக்கு வடக்கே ஞராச்சி மலையும்[1] தடமும் சுத்தக் கிரயத்துக்கு வாங்கி அணை கட்டுகிற சமயத்திலே வெள்ளை வேட்டுவன் என்கிற பாளையக்காரன் அணை கட்டுகிற எல்லை தன்னதென்று சண்டை பண்ணினமையாலே வெள்ளை வேட்டுவரை ஜெயிச்சு அணையும் கட்டி வெகு திரவவியங்கள் செலவளிச்சு சர்ப்பம் போயிருந்த அடையாளங்களைப் பிடிச்சு வாய்க்கால் வெட்டி கொடுமுடி வரைக்கும் வாய்க்கால் வெட்டி வைச்சு பவானி அணை முதல் கொடுமுடி ஸ்தானத்துக்கு அத்துவரைக்கும் மூக்காத வழி தூரத்துக்கு சர்ப்பம் போன போக்கிலே வாய்க்கால் வெட்டின ஏழுகாத வழி நடை கோணக் கோணலாக வாக்கியால் வெட்டி வச்சான்.

## பெயர்க் காரணம்

அந்த சர்ப்பம் போன போக்கிலே வாக்கியால் வெட்டி வச்சு பவானி ஆற்றிலே சர்ப்பம் படுத்துயிருந்த யிடத்திலே அணையும் கட்டி விச்சபடியினாலே காலிங்கக் கவுண்டன் என்றும் பேர் வரப்பட்டுப் பிரசித்திப்பட்டவனாய் இருக்கும் நாளையில் முன்னாலே சபதம் கோரியிருக்கப்பட்ட பண்ணை குலத்திலே தன் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொண்டு அம்ச புருஷனாய் தெய்வ கடாட்சத்துனாலே சம்பத்து னாம தேயமான காலிங்கன் என்கிற நாமதேயமும் வேள்ாள சாதியானபடியினாலே கவுண்டர் என்கிற நாமதேயமும் ரெண்டு நாமதேயமும் சேர்ந்து காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப்பவனாய் தான் கட்டி வச்ச அணைக்குக் காலிங்கக் கவுண்டன் அணையென்றும் காலிங்கக் கவுண்டன் வாக்கியாவென்றும் தான் உண்டு பண்ணின நீர்ப் பாங்கு நிலத்தில் விளையப்பட்ட காலிங்க நெல்லு யென்று விளையப் பண்ணி சம்பந்த பாந்தியங்களும் செய்து கொண்டு யிருந்தான்.

## நாவிதனுக்கு மானியம்

இப்படி வாக்கியால் வெட்டி அணைகட்டி பிள்ளைக்குக் கலியாணம் பண்ணுகுற வரைக்கும் சபதம் கோரி தீட்சை வளர்த்துக் கொண்டு யிருக்கும் சமயத்தில் தெய்வ கடாட்சத்தினாலே

1. ஞராச்சிமலை—ஊராட்சிக் கோட்டை மலை.

மனோபீஷ்டம் நிறைவேறியிருக்கும் சமயத்தில் ஒரு நாள் ஆயாசத்துடனே நித்திரை பண்ணிக் கொண்டுயிருக்கும் சமயத்திலே ஒரு நாசுவன் தீட்சை மயிரை வாங்கிப் போட்டு நிலைக் கண்ணாடியை எதிரே வச்சு வணக்கத்துடனே நின்று கொண்டுயிருந்தான். நித்திரை தெளிஞ்சு நிலைக் கண்ணாடி பார்த்தவுடனே ஆயுஷ்காரமாய் இருந்த படியினாலே சந்தோஷம் வந்து நாசுவனைப் பார்த்து உனக்கு என்ன வேணுமென்று கேட்டான். அந்த நாசுவன் என் பேர் விளங்கி இருக்கும்படியாக பண்ண வேணுமென்று மனுவு கேட்டுக் கொண்டான். தாம் கட்டி வச்ச அணையோரம் தாம் இருக்கப்பட்ட காலிங்கன் பாளையத்துக்கு தென்புறம் நாசுவன் பேராலே ஊரு உண்டு பண்ணி நாசுவன் பாளையம் என்றும் பேர் விளங்கப் பண்ணி அந்த நாசுவனுக்கு அந்த பாளையம் சர்வமானியமாகக் கொடுத்தார்.[1]

இப்படிக்கு காலிங்கராய கவுண்டர் என்கிறபேர் பிரசித்திப் பட்டவராய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரராய் பூந்துறை நாட்டுக்கு நாட்டாதிபத்தியத்தாய் உண்டு பண்ணின அணைவாக்கியால் பரிபாலனம் பண்ணிக்கொண்டு பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் காலிங்கக் கவுண்டன் என்கிற நாமதேயம் உண்டானவர்களாய் இருந்தார்கள்.

## தெய்வமானான்

பவானிக் கூடலிலே காலிங்கராயன் என்கிறவன் அணை கட்டி வச்சு பேர் பிரசித்தி பண்ணினது கலியுகாப்தம் 2000.[2] காலிங்க கவுண்டன் கட்டி இருக்கப்பட்ட அணையிலே ஷெி கவுண்டனையும் சர்ப்பத்தையும் சிலாபிரதிமை ரூபமாக கல்வெட்டி வச்சு சிலா சாசனமும் எழுதியிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் பரம்பரையாய் வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக்கொண்டு வருகிறது. வருஷப் பிரதியும் காலிங்கக் கவுண்டன் பிரதிமைக்கு பூசை நைய்வேத்யம் பண்ணிக்கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாண்மை விளைஞ்சு கொண்டு வருகிறது. இப்படி ஈஸ்வரர் அனுக்கிரகத்தினாலே மூர்த்திகரம் உண்டாகியிருக்கிறது,

---

1. இன்றும் அணையை அடுத்துள்ள ஊர் மேட்டு நாவிதன் பாளையம், அணை நாவிதன் பாளையம் என்ற பெயரால் வழங்குகிறது.

2. காலம் தவறு.

ஈஸ்வர அனுக்கிரகத்துனாலே காலிங்க கவுண்டன் என்கிற அம்சை புருஷன் வம்ச பரம்பரையிலே காலிங்க கவுண்டன் என்று பேர் வச்சுக்கொண்டு வருகிறது.

## ஆமைமலை போன காரணம்

இப்படிக் காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப்பட்டவர்களாய் பலாட்டியனாய் வெள்ளோட்டு பூந்துறை நாட்டாதிபத்தியம் ஆண்டுகொண்டு வரும் நாளையிலே கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பட்டக்காரர்களாய் இருக்கப்பட்டவர்கள் சரி இருப்பும் சரி மரியாதிகளும் கொடுக்கப்படாது என்று சொன்னதினாலேயும் பூர்வத்திலே சேரமான் பெருமாள் சாத்தந்த கோத்திரக்காரர்களுக்கு காவிடிக்கை நாட்டு பிறவும் பண்ணிக்கொடுத்து இருக்கிறபடியினாலேயும் ராயட்டுப்பட்டக்காரர்கள் சரி மரியாதி நடக்க மாட்டாதென்று சொல்லிக்கொண்டபடியினாலே வெள்ளோடுவிட்டு மனவெறுப்பினாலே ஆனைமலை சருவுலே தங்கள் காணியாட்சியான காவிடிக்கா நாடு காடுகொண்டு வனமாய் இருந்த ஸ்தலத்தில் தங்கள் பசுமாடுகளை விட்டுயிருந்து மாடுகளை சம்ரட்சணை பண்ணுகிறதுக்காக தங்கள் ஜனங்கள் இருந்தபடியினாலே காவிடிக்கா நாட்டு வனத்து வந்து மாடுகளையும் பார்த்து மாடுகளுக்கு சம்ரட்சணைக்காகப் பட்டிகளும்போடுவிச்சு அஞ்சாறு சாலைகளும் கட்டிவிச்சு கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பாளையப் பட்டுகளுக்கும் இவர்களுக்கெல்லாம் அதிக மரியாதைகள் உண்டு பண்ணிக்கொள்ளவேணுமென்று நினைச்சு ராய சமஸ்தானத்துக்குப் போனார்.

## ராயர் பேட்டி

ராய சமஸ்தானத்தில் காத்துக்கொண்டிருக்கும் நாளையில் பண்ணிரண்டு வருஷம் வரைக்கும் ராயரவர்கள் பேட்டியில்லாமல் கையிலே கொண்டு போன திரவியங்கள் எல்லாம் செலவழிந்து போய் கஷ்டப்பட்டுக்கொண்டு அதிவிசனத்தை அடைந்தவனாய் தன்னுடைய இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொண்டு மன வயிரத்தை அடைஞ்சவனாய் பெனுகொண்டைப் பட்டணத்துக்கு வெளியிலே தென்புறம் காளி கோவிலிலே போய் உசெத்திரமாகப் படுத்துக்கொண்டு இருந்தார்.

சுத்த உபவாசத்துடனே காளி கோவிலிலே இருக்கப்பட்ட காலிங்கக் கவுண்டன் சொப்பனத்திலே பன்னிரண்டா நாள் இராத்திரி ராயர் குமாரனுக்கு சித்தப் பிரம்மை பிடிச்சு அது நிவாரணம் இல்லாமல் இருக்கிறபடியினாலே என்னுடைய சன்னியு

தானத்திலே இருக்கப்பட்ட விபூதியைக் கையிலே கொண்டுபோய் அந்தச் சித்தப் பிரமையாய் இருக்கப்பட்டவன் பேரில் போட்டால் சித்தப் பிரமை தீர்ந்து ராச குமாரனாக அரண்மனை போய்ச் சேர்ந்து யிருப்பான். ராயரவர்கள் உன்பேரிலே சந்தோஷமாய் உன் மனோ பீஷ்டம் சித்தியாகும் என்று சொப்பனமாச்சுது.

அந்தச் சொப்பனத்தைக் கண்டவுடனே பனிரெண்டு நாள் பட்டினி இருக்கப்பட்டவன் விபூதி யெடுத்துக்கொண்டு பெனு கொண்ட பட்டணத்துக்கு வந்து இது சொப்பனத்து சோதனை பார்த்துக்கொண்டு வருகுற சமயத்தில் ராசகுமாரன் பட்டணத்து வீதிகளிலே சித்த பிரமை பிடிச்சு தன்னப்போலே திரிகிற குறிப் பைக்கண்டு பிடிச்சு ராசகுமாரன் பேரிலே காளியை நினைச்சு விபூதி போட்டான்.

அந்த விபூதி தூளி ராசகுமாரன் பேரிலே விழுந்தவுடனே சித்த பிரமை தெளிஞ்சவனாய் ராஜ சின்னங்களுடனே அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

அக்காலத்து நரபதி சிம்ஹஸ்னாதிபதியான பெனுகொண்டை விசய நகரம் ஆளப்பட்ட தேவராயர் அவர்கள் தம்முடைய குமார னானவனுக்குச் சித்தப் பிரமை விடுதலை பண்ணினவனைத் தரு விக்கச் சொல்லி மந்திரி பிரதானிகளுக்கு உத்தரவு செய்தபடியி னாலே அந்த சமயத்தில் தரிவிச்சு ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷத்தினாலே காலிங்கக் கவுண்டனைப் பார்த்து உன் செனன் மப்பூமி முதலான விருத்தாந்தங்கள் என்னவென்று கேள்கு மிடத்தில் பவானி கூடல் சமீபத்தில் உண்டுபண்ணின அணை — வாய்க்கால் முதலான சங்கதிகளும் தெய்வ கடாட்சத்துனாலே காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் வழங்கப்பட்ட வரலாறும் கொங்கு இருபத்து நாலு நாட்டுலே பட்டக்காரர்களாய் சமானி டை...சி மரியாதிகள் தாள்வு நடக்கப்பட்டு சமுஸ்தானத்திலே காத்துக்கொண்டிருந்து காளிகாதேவி அனுக்கிரகம் பண்ணின நாள் வரைக்கும் வரலாறு அறியப்பண்ணிக்கொண்ட படியினாலே ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு உன்னுடைய நாமதேயம் என்னவென்று கேட்டார்கள். அப்போ பேர் அறியப் பண்ணிக் கொண்டபடியினாலே ராயர் அவர்கள் உத்திரவு செய்து என்னு டைய வம்சம் உத்தாரம்பண்ணி இருக்கிறயடியினாலே என்னுடைய பேர் தெய்வ கடாட்சத்துனாலே உண்டாகிய பேருடனே ராச கடாட்சத்துனாலே கொடுக்கப்பட்ட ராயச புத்தகத்துடனே காலிங்கராய கவுண்டன் என்று பேர் வச்சு உனக்கு என்ன வேணு மென்று கேட்டார்கள். அந்த சமயத்தில் என் காணியாட்சியான

ஆனைமலை சரிவுலே காவிடிக்கை நாடு என்னப்பட்ட பூமியை தயவு செய்ய வேணுமென்று கேட்டுக்கொண்டார்.

### ராயரிடம் பெற்ற வரிசை

ராயரவர்கள் கடாட்சம் செய்து சிபஹல்லா பல்லாக்கு, உபய சாமரம், சுருட்டி, சூரியபான ஆலவட்டம், வெள்ளைக் கொடை, பச்சைக்கொடை, பஞ்சவர்ணக் கொடை, பஞ்சவர்ண வெட்டுப் பாவாடை, அனுமடால் கெருடடால் மகரடால் பசவசங்கரடால் பஞ்சவர்ணடால், ஆனைமேல் பேரிகை ஒட்டைமேல் நகாரு, குதிரைமேல் டகாரி எருதுமேல் தம்பட்டம், தாரை, சின்னம் எக்காளம் பேரிகை சிக்குமேளம் இது முதலான வாத்தியங்கள் பிருதுகளும் கொடுத்து ரண பாஷிகரம் கலிகிதுருயி முத்தொண்டி பஞ்சொண்டி ஒண்டி ரேக்கு வீர சங்கிலி னாக ககாணும் புலி செறமம் கரடி மயிர் வக்கிய பிரீதங்கனி களம் வீர கண்டாமணி சாமது ரோகா வெண்டையம் தங்க பிஞ்சு இது முதலான ஆபரணங்களையெல்லாம் அலங்கரிச்சு குதிரைக்கு புலித்தோல் மேல் மடக்கு அடைசல்லி முகசல்லி பக்க சல்லி கால் தண்டை கலிகிதுருயி இது முதலான ஆபரணங்களை தறீச்சு பட்டத்துக் குதிரையென்று நேமுகம் செய்து பட்டணப் பிரவேசம் பண்ணிவிச்சு ஆனைமலை சரிவிலே காவிடிக்கை நாட்டு பூமிக்கு நீயே மனச புதாரனாக ஆண்டு கொண்டு சந்திராதித்தியர் உள்ள வரைக்கும் வம்ச பரம்பரையாய் மனசபுதாரனாக ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வரவேணுமென்று பட்டாபிஷேகம் செய்து பட்டத்து ஆயுதம் கையிலே கொடுத்து அறுபத்து நாலு அமரகாரரை நேமுகம் செய்து இரட்டை வாள் பச்ச ஈட்டி, கரீட்டி, வெள்ளி ஈட்டி, தங்கக் கட்டு துப்பாக்கி வெள்ளி முலாம் துபாகி சீறு மாறுடை இது முதலான ஆயுதங்களும் கொடுத்தார்கள்.

### பாளையக்காரன்

முன்னாலே நாகூர் பாளையப்பட்டு பட்டக்காரர்கள் சரிசமமான மரியாதை கொடுக்கிறது இல்லை என்று சொன்ன மன வெறுப்புனாலே ராய சமஸ்தானத்திலே காத்து இருந்து தெய்வ கடாட்சத்துனாலே சகல பிருதுகள் ஆயுதங்களும் உண்டாய்காவிடிக்கை நாட்டுக்குப் பாளையக்காரராக காலிங்கராயக் கவுண்டர் என்கிற பேர் பிரசித்திப்பட்டவனாய்ப்பட்டு கட்டியங்களுடனே புறப்பட்டு ஆனைமலைச் சரிவிலே வனாந்திரத்திலே தம்முடைய மாட்டுப்பட்டிகள் இருக்கப்பட்ட இடத்தில் சேர்ந்து அரண்மனையும் கட்டி வீடுகள் உண்டுபண்ணி பூர்வத்தில் வனத்திலே

மாடுகளுக்கு ஆதாரமாகத்தோண்டியிருக்கப்பட்ட ஊற்றுக்குளிகள் இருக்கப்பட்ட இடத்தில் ஊரு கட்டிவிச்ச படியினாலே ஊற்றுக் குழி என்று கிராம நாததேயம் உண்டாகி ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவனாய் இருந் தார்கள். ராயர் சமுஸ்தானத்திலே காலிங்கராயக் கவுண்டன் என்கிற பேர் தெய்வ கடாட்சத்துனாலேயும் பாளையக்காரர் என்று பிரசித்திப்பட்டு பாளையப்பட்டு உண்டான நாள் முதல் சாலிவாகன சகாபுதம் 1120 முதல் சகாபுதம் 1702 வரைக்கும் 582 பட்டங்களுடைய வரிசைகளும் அவாளாவளுடைய சரியைகளும் இதன் கீழே எழுதி வருகிறது.

## பரம்பரை

வம்ச பரம்பரையாய் தெய்வ கடாட்சத்துனாலேயும் ராஜ கடாட்சத்துனாலேயும் காலிங்கராயன் என்கிற பேர் வமுச பரம் பரையாய் பட்டக்காரர்களுக்குப்பேர் உண்டாகி வருகிறது.

தெய்வ கடாட்சத்துனாலே சர்ப்பம் போன போக்கு வாக்கி யாலும் வெட்டி வச்சு அணையும் கட்டி விச்சு காலிங்கனென்கிற பேர் பிரசித்திப்பட்டு வமுசாபிவிருத்தியிலே காலிங்கராயனென் கிறவர் காவிடிக்கா நாட்டுக்கு மனபுதாரனாயி காலிங்கராய னென்கிற பேராலே ஊத்துக்குளி பாளையக்காரர் என்று பட்டாபி ஷேகம் அன்னருடைய நாள்வரைக்கும் காலிங்கராயன் அணை யென்றும் காலிங்கராயன் வாக்கியாலென்றும் பேர் பிரசித்திப்பட லாச்சுது.

1. காலிங்கராயக் கவுண்டர் பட்டமாண்ட வருஷம் 50

2. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 40

3. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராய கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

4. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராய கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

5. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 19

6. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 21

7. இவருடைய தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 12

8. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

9. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 27

10. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 16

11. இமர் குமாரன் கலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 9

12. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 28

13. இவர் குமாரன் விருமாண்டக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 30

14. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 11

15. இவர் குமாரர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

16. இவர் குமாரன் ஈசுரமூர்த்திக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 6

17. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 15

18. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 31

19. இவர் குமாரன் விருமாண்டக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

20. இவர் குமாரன் பிள்ளை முத்து காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 13

21. இவர் குமாரன் சின்னைய காலிங்கராயக் கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 19

22. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

23. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 30

24. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 26

25. இவர் தம்பி நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 12

26. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 29

27. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 2

28. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 4

## முதல் பட்டம்

முதல் பட்டக் காரனாகிய காலிங்கராயக் கவுண்டன் நாளையிலே ஊத்துக்குளி புரமும் உண்டு பண்ணி ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் கொங்கேழு சிவாலயம் முதலாகிய ஸ்ரீரங்கம் சிதம்பரம் கும்பகோணம் மாயூரம் திருக்கடவூர் ஆவடயார் கோவில் ராமேஸ்வரம் தர்ப்ப சேணம்[1] மதுரை பழனியாண்டர் பிரதட்சணமாய் இந்த பிரதீரத்து மஹா ஸ்தலங்களை எல்லாம் யாத்திரை செய்து அந்தந்த ஸ்தலங்களுக்கு தருமங்கள் தானங்கள் பண்ணி யாத்திரங்கள் தீர்ந்தவுடனே ஊத்துக்குழிக்கு வந்து ராய சமுஸ்தானத்திலே தமக்கு பிரசன்னமான இஷ்ட தெய்வத்தைக் கோரி பிரார்த்தனை பண்ணி அகத்தூர் அம்மனென்று நிதர்சனமாகப்பட்ட தேவாலயம் சீரணோதாரணம் பண்ணி அகத்தூர் அம்மனென்று பேர் பிரசித்திபடும்படியாய் பூஜை நெயிவேத்தியங்கள் செய்விச்சுக் கொண்டு ராய சமுஸ்தானத்திலே தனக்கு மனசபுதார யிலாவுக்குச் சேர்ந்த வாரக்கனாட்டு யெல்லை பள்ளத்துக்குத் தெற்கு 'நல்லுருக்கா நாடு பாலாத்துக்கு வடக்கு புங்குலுக்கே நாடு தானசாரை பள்ளத்துக்கு மேற்கு கம்பால துரை மணலியாறுக்கும் கிழக்கு இந்த நான்கெல்லைக்குட்பட்ட கீழ்மேல் நாற்காதம் தென்வடல் இருகாதம் இந்த அத்துக் காவிடிக்கா நாட்டு காடுகளையெல்லாம் வெட்டிவச்சு அந்தந்தயிடங்களிலே நீர்ப்பாங்கு உண்டு பண்ணி வீடேத்தி ஊர்களும் உண்டுபண்ணிக் கொண்டு நஞ்சை புஞ்சை நிலங்களும் திட்டப்படுத்திநாடு வூர் பாளைப்பட்டுக்களுக்கு அரண்மனையிலே அதிக மரியாதைகாரனாய் ஊத்துக்குளி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் அதிதிறமைசாலிகளாய் பிரபுத்துவம் பண்ணிக் கொண்டு வந்தார்.

---

1. தர்ப்பசேணம் —திருப்புல்லணை.

## இரண்டாவது பட்டம்

## முதல் 8வரை

ரெண்டான் பட்டக்காரனான நஞ்சய காலிங்கராயக் கவுண்டன் நாள் முதல் எட்டாம் பட்டக்காரனான காலிங்கராயக் கவுண்டர் நாள் வரைக்கும் ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப்பட்டவர்களாய் வம்ச பரம்பரையாய்ப் பண்ணப் பட்ட தருமங்களைப் பரிபாலனம் பண்ணிக் கொண்டு அந்தந்த காலத்திலே ராய சமுஸ்தானாதிபதிகள் கட்டளையிட்டபடிக்கு சமுஸ்தானத்திலே ஆஜரிலே இருந்து நடந்து கொண்டு மனசு புதாரனாய் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

## கால்வழியினர்

ஒன்பதாம் பட்டக்காரனாகிய நஞ்சய காலிங்க ராயக் கவுண்டர் நாளையில் அக்காலத்தில் பாண்டிய சிம்மாசனாதிபதி யாகிய விசுவநாத நாயக்கர் எழுந்தருளியிருக்குற நாளையில் சமுஸ் தானத்துக்குச் சேர்ந்து இருந்து பாளையக்காரர்களையெல்லாம் பேட்டிக்குத் தருவிச்சு மதுரைக்குப் போய் இருக்கும் நாளையில் அக்காலத்து தட்சிண பிரதேசத்திலே திறன்னவல்லி சீர்மையிலே[1] அஞ்சு கோட்டை போட்டுக் கொண்டு அஞ்சுராசாசளயென்றவான் சமுஸ்தானத்துப் பிரபுக்களை நிராகரிச்சு யெதிர் பாளையம் போட்டுக் கொண்டுயிருக்கும் நாளையில் அந்த சமயத்தில் நாயக்க ரவர்கள் உத்தரவுப்படிக்கு என் சமஸ்தான நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் சேன சேகரத்துடனே திர்ன்னவல்லி சீமைக்குப் போய் அஞ்சு ராசாக்களுடனே யுத்தம் செய்து ஒரு கோட்டையிலே இருக்கிற அஞ்சுராசா வெட்டிப் போட்டு கோட்டையைக் கைவசம் பண்ணிக் கொண்டு யெதிராளிகளையும் கொண்டுவந்து நாயக்கர வர்கள் சமஸ்தானத்திலே வைத்தார். அப்போ நாயக்கரவர்கள் 'நீ பராக்கிரமசாலி' என்று நிரம்பவும் சந்தோஷப்பட்டு தங்க னிகளத்திலே சுற தைத்து அதிலே தலைபோல பண்ணிப் போட்டு யெதிராளி தலையென்று காலுக்குப் போடுகுற பிறிதும் கொடுத்து பராக்கிரம நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் என்று பேரும் கொடுத்து ஆடையாபரணங்கள் முதலான ஆபரணங்களும் கொடுத்து சகல வெகுமதிகளும் பண்ணி மதுரை ஆஸ்தானக் கோட்டைக்கு அன்பத்தோரான் கொத்தளத்துக்கு தலமை வயிக்கும் படியாக நிகுதிசெய்து பாளையப்பட்டு கிராமங்களை

---

1. திறன்னவல்லி.--திருநெல்வேலி.


பொங்குக பொங்கலே!
புதுமைகள் பொங்குக!
வறட்சியை விரட்டிடும்
புரட்சிப் பணிகளில்
எப்போதும் இல்லாத
முப்போக விளைச்சல்!
ஆசனம் போட்டு அழகுடலைக் காப்பதுபோல்
பாசனத் திட்டம் பலவுண்டு தமிழ்நாட்டில்!
கண்போலக் கிராமநலம் காக்கும் தமிழ்நாட்டில்
மின்விளக்கு எரியாத ஊரே இல்லை!
நம்பிக்கை மிகக் கொண்டு நல்விளைச்சல் கண்டிடவே
நாட்டினிலே மற்ற மற்ற மாநிலங்கள் வியந்திடவே
பம்புசெட் ஏராளம்
பயன்கொடுக்கும் தமிழகத்தைப்
பாராட்ட வார்த்தையுண்டோ!
கோல எழில் கொண்ட குக்கிராமம் அத்தனையும்
சாலைகள் இணைக்கின்ற தனிச்சிறப்பை என்னவென்போம்!
மனம் ஒடிந்த பாட்டாளி
மகிழ்ச்சி ஒளி கண்டிடவே
மனைப் பட்டா நிலப்பட்டா
வழங்கியதே தமிழரசு!
தாழ்த்தப்பட்டோர்
பிற்படுத்தப் பட்டோர்
வாழ்த்திடும் வகையில்
வளம்தரும் திட்டங்கள்!
உழவுக்கு வழிபாடு
புரிகின்ற தமிழ்நாடு
தொழுகைக்குக் கோவிலே
வயல்-ஆலை எனும் நாடு!
பொங்குக பொங்கலே!
தங்குக இன்பமே!
பொங்கல் வாழ்த்துக்களுடன் வெளியிட்டோர்,
இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை
தமிழக அரசு
சென்னை 600 009

வளம் தரு வீதியிலே...

# ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் அமைப்போம்

இன்று வருமான வரி விலக்குக்கான உச்சவரம்பு ரூ. 8000-க்கு உயர்த்தப் பட்டுள்ளது. (இதுவரை இருந்த வரம்பு ரூ. 6000 ஆகும்). இதனால் 7 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். கடந்த ஆண்டு புதிதாக 1.33 லட்சம் பேர் வருமான வரி செலுத்தும் எல்லைக்குள் கொண்டுவரப்பட்டு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளனர்.

சேமிப்புக்கு பல வகையிலும் ஊக்கம் கொடுக்கப்படுகிறது. (ரூ. 4000 வரை சேமிப்புக்கு வரி ஏதுமில்லை) வரி ஏய்ப்போருக்கும் கடுந் தண்டனை காத்திருக்கிறது.



நெஞ்சில் உரமும்
செயலில் திறனும்
உறுதுணை நிற்கும்

davp 75/484

சுத்த ஜாரியாக அனுபவிச்சுக் கொண்டு வரும்படியாக நிகுதி செய்த படியினாலே அந்த நாள் முதல் பதினெட்டாம் பட்டம் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் நாள் வரைக்கும் மதுரை சமஸ்தான கர்த்தராகிய நாயக்கரவர்கள் பரம்பரையிலே கட்டு பண்ணின நிகுதி நீட்டுக்கு அரண்மனைக்கு நடந்துகொண்டு வமிச பரம்பரையாய் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

பத்தொன்பதாம் பட்டக்காரனான விருமாண்டேக் காலிங்கராயக் கவுண்டர் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ்தானத்தும் மதுரை சமஸ்தானத்துக்கும் கனுவாஇக்கு கீள்ப்பட்ட கெடிகளுக்காக யுத்த சன்னாஹமாக யிருந்தார்கள்.

இருபத்து மூன்றாம் பட்டக்காரரான நஞ்சிய காலிங்கராயக் கவுண்டர் நாளையில்[1] கனுவாய்க்கு கீள்பட்ட[2] கெடிகள் எல்லாம் மைசூர் சமஸ்தானத்துக்குச் சேர்ந்துயிருக்கும் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ்தானத்துக் கர்த்தராகிய இம்முடிராஜ உடையாரவர்கள் பேட்டிக்குப் போய் இருக்கும் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ்தானத்துக்குச் சேர்ந்த கொடகர் சமஸ்தானத்துக்கு யெதுத்துயிருக்கிற நகளையென்று யென் வம்சத்தார்களில் சன சேகரத்துடனே[3] குடகு போகச் சொல்லி உத்தரவு ஆனபடியினாலே சனசேகரத்துடனே கொடகு ராஜாவின் பேரிலே போய் யுத்தம் செய்து ஜெயிச்சு வந்தார்கள்.

அப்போ மைசூர் சமஸ்தான கர்த்தாக்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு அஷ்ட கோண தண்டிகைக்கு[4] தங்க முலாம் பூசி யெட்டு கலசத்துடனே தண்டிகையுங் கொடுத்து ஆடையாபரணங்களும் கொடுத்து ஊற்றுக்குழி பாளையப்பட்டுக்கு அக்காலத்து சேர்ந்து இருந்த கிராமங்கள் ஒன்பதுக்கும் வருஷம் ஒண்ணுக்கு ராசகோபாலி 756 நிகுதி செய்து உத்தரவு செய்தார்கள். அந்த நாள்முதல் என் சகோதரரான நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்டு கொண்டு வந்த நாள் வரைக்கும் மைசூர் சமஸ்தானத்தார் கட்டளையிட்ட [5]நிகுதிப்படிக்கு அரமனைக்கு நடந்து கொண்டு ஊற்றுக்குழி பாளையக்காரர் என்கிற வாளாய் பட்டம் ஆண்டு கொண்டு வந்தார்கள்.

---

1. கனுவாஇ — பாளக்காட்டுக் கணவாய்
2. கெடி — கோட்டை.
3. சனசேகரம் — படை
4. தண்டிகை — பல்லாக்கு.
5. நிகுதி—கப்பம்

பூர்வம் முதலாக என் வமுசத்திலுள்ள பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வரப்பட்டவர்கள் செவுறிய வுதார கெம்பீர குணாதிசயங்கள் உள்ளவர்களாய் இருந்து மற்ற பாளையக்காரர் களிலே அந்தந்த காலத்திலே அரமனைக்கு நிராகரிச்சுயிருக்கப் பட்டவர்களையும் தமக்கு யெதிரியாயிருக்கப்பட்டவர்களையும் மடக்கிக் கொண்டு ஊத்துக்குளியிலே கோட்டையும் பந்தோ பஸ்தும் பண்ணிக் கொண்டு கால்தளம் அய்யாயிரம் நூறு குதிரை ஆயுதங்கள் வச்சு இருக்கப்பட்ட கனு அய்யாயிரம் ஒரு கடகம் யானை இதுகளுடனே ஆனைமலை கானல்களிலே ஆனைகள் பிடிச்சு அரண்மனைக்குக் கொடுத்துக் கொண்டு அரமனையார் கட்டளையிட்டபடி நடந்து கொண்டு அரமனையார் கட்டளை யிட்ட ஆனைமலை மாச்ச நாயக்கன் பாளையம் பாதிகாவலும் முன்னாள் மூலை போதிக்கு வீரருயன் ஒரு பணமும் மதிப்பு பல சரக்கு பொதி ஒன்னுக்கு ஒரு ரூபாயும் மகமை நடந்து வந்தபடி யினாலே அந்தப் பாதிகாவலும் மகமையும் அனுபவிச்சுக் கொண்டு அரமனையிலே கட்டுப்பண்ணின நிகுதி பணமும் செலுத்திக் கொண்டு ஆண்டு அனுபவித்துக் கொண்டு வரும் நாளையில் என் முப்பாட்டனார் நாளிலே பாதிகாவல் விட்டுட்டுப்போய் மலையாளத்து கோளிகூடு ராசாவின் பேரிலே யுத்த கனுகத்திலே யெலைபள்ளியிலே விளுந்துபோய் விட்டார்கள் என் தொப்பனார் நாள் முதல் சுங்கம் மகமை நடந்து வந்தது.

என் தமையனார் ரெண்டுபேர் நாளையிலேயும் திப்பு சுல்தான் அங்காமி நாள் வரைக்கும் ஒரு நிகுதியில்லாமல் சில்லரை கள்ளர் அங்காமிகளுக்கும் தொந்தரைகள் பட்டுக் கொண்டு யிருந் தார்கள்.

பூர்வம் முதலாக வமுசாவளி முதலானதுகளுக்கு உண்டான ஆதாரங்கள் முதலானதுகளும் காலாந்திரங்களிலே ராசீகங்களிலே கைசோர்ந்து போய்விட்ட படியினாலே அகப்பட்ட பூர்வத்திய பளமுளி[1] — கிரந்தங்களினாலேயும் ஒளுகுகள்யாலேயும் பரம்பரை யிலே அனுபவித்த கேள்வியினாலேயும் தெரிந்து கொண்டு கைபீது தெரியப்படுத்திக் கொள்ளலாச்சுது.

### கம்பெனி ஆட்சி

கலியுகாபுதம் 4891 மேல் செல்லாநின்ற விரோதிகிருது வருஷம் மாசி மாதம் 4 தேதி சுபதினத்தில் எனக்குப்பட்டமாய் குமாரசாமி

1. பளமுளி—பழமொழி

காலிங்கராயக் கவுண்டர் என்னப்பட்ட பேர் விளங்கிக் கொண்டவனாகயிருந்து திப்பு சுல்தான் துரைத்தனத்தில் சில்லரை கள்ளர் தொந்தரவுகள் பட்டுக்கொண்டு இருக்கும் நாளையில் மகாராஜ ராஜஸ்ரீ கும்பினி துரைத்தனமாகிறது என்று ரொம்பவும் சந்தோஷத்தை அடைந்தவனாய் குஞ்சு குழந்தைகளை யெல்லாம் பெம்பாயி சீர்மையிலே வச்சுப்போட்டு நான் ஊற்றுக் குழியிலே ஹாஜரிலே காத்துக்கொண்டு கும்பிணி தயவு கோரியிருக்கும் நாளையில் சித்தார்த்தி வருஷத்திலே மகாராஜராஜஸ்ரீ பாலக் காட்டுக் கோட்டை மேஜர் கமாண்டர் இன்சீபு (ஜேம்சு) ரமலி சாயபு அவர்கள் மஹாராஜராஜஸ்ரீ பெம்பாயி பவுசுதார்களுக்கு யெல்லாம் பெரியசேர்வை துரைகளாகிய இற்றியொட்டு சாயபு அவர்கள் மகாராஜராஜஸ்ரீ செண்டறல் அட்டலி சாயபு அவர்கள் மேல் எழுதப்பட்ட துரையள் என் பேரிலே கடாட்சம் செய்து வந்த படியினாலே[1] நானும் துரையள் கடாட்சயத்தும்படி நடந்து கொண்டு வந்தவனாய் இருந்தபடியினாலே என்னிடத்திலே பூரண தயவாகக் கடாட்சம் பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

மகாராஜராஜஸ்ரீ கம்பெனி துரையள் கடாட்சம் செய்து யென் மானமரியாதைகளைப் பரிபாலனம் பண்ணி ஊத்துக் குழிக்குச் சேர்ந்த ஒன்பது கிராமமும் கண்டு முதலான பேரீஜ்லே சாதலவார் சிபந்தி தவிர பத்தில் மூணு பாளையக்கார மிறாசு பத்தில் மூணு சாரி செய்துயிருக்கிற படியினாலே சாதலவார் சிபந்தி தவிர பத்தில் ஏழு சருகாருக்குச் செலுத்திக் கொண்டு யென் பட்டத்து ஆயுதங்கள் தயவு செய்து இருக்கிறபடியினாலே ஊற்றுக்குழி பாளையக்காரர் என்ற பேராய் இருக்கிறேன்.

மகாராஜராஜஸ்ரீ கம்பெனி துரையவர்கள் கடாட்சத்துக்கும் பாத்திரனாய் குமாரசாமி காலிங்கராயக் கவுண்டர் என்கிற பேர் உள்ளவனாய் என் வம்ச பரம்பரையிலே சம்ரட்சணை பண்ணப் பட்டவாளுடைய சந்ததியிலே சேரப்பட்ட அடுத்த சன்ம சயிதமாய் முந்நூறு ஜனத்துக்கு அஹமன்னியாய் காலட்சேபத்துக்கு மார்க்கமாய் நடப்பிவிச்சுக் கொண்டு துரையள் கட்டளை யிட்டபடிக்கு நடந்து கொண்டு மஹாராஜராஜஸ்ரீ கம்பெனி துரையள் கடாட்சத்துக்குப் பாத்திரனாக இருக்கிறேன.

ஊற்றுக்குழி காலிங்கராயக் கவுண்டன் ருசு
(25 பங்குனி விஷு)

---

1. கடாட்சம் செய்து எழுதிய கம்பெனியார் கடிதம் பின்னர் காண்க.

புலவர் செ. இராசு. அளிக்கும்

# "மோரூர்க் காங்கேயர் ஏடு"

ஸ்ரீமத் நந்திகேசுபர சுவாமியார் அனுக்கிரகத்தாலே திருவாய் மொழிந்தருளியபடிக்கு அநேகம் சதுர்யுகம்[1] பூசை கொண்டருளிய தேவாதி தேவன் தெய்வ உத்தமன் பத்திப் பிரியன் பத்தயசாசனன் பார்வதி மணாளன் திரு பொஷ்கரணி முக்கணீசுரன் நின்ற கோல மழகிய நிமலன் நிறமொரு பஞ்சவர்ணப் பிரகாசன் தெண்டாயுத அஸ்தன் செம்புத் தீவில் திராவிட தேசத்தில் தொண்ட மண்டலத்தில் காஞ்சிமா நகரில் திருக்கம்பையாற்றில் பார்வதி தேவியம்மன் அர்த்தபாகம் பெறவேண்டி அரியதவசு பண்ணுகையில்வாமபாகம்[2] பெத்தருளிய[3] அம்மன் வீரபாகுவைப் பார்த்து நீங்கள் கூ பேரும் தேவர் செரையை[4] மீட்டபடியினாலே எங்களுக்கு அரவகிரியைச்[5] சூழ்ந்த எளுகரை நாட்டுக்கும்கொங்கனென்றும்[6] பேருமிட்டுபட்டாபிஷேகம் சூட்டுகிறேனென்று அம்மன் கட்டளையிட்டபடிக்கு கொங்கு மண்டலத்திலே தெட்சிண கைலாசமாகிய அரவகிரியைச் சூழ்ந்த எழுகரை நாடெனும்காவேரிவவானி[7] திருவணிமுத்தாநதி[8] அலகுமுரிச்சான்[9] தொப்பை ஆம்பிராந்தி[10] நொய்யல் ஆக சத்த நதியாகிய எழுகரைநாட்டிலுள்ள[11]சிவசந்நிதிகளும்பூந்துறை நாடு, பூவாணிநாடு, வஞ்சிநாடு[12] சேலநாடு, இராசீபுரம்நாடு, பருத்திப் பள்ளி நாடு ஏழூர்நாடு, வாழுவந்திநாடு, அரையநாடு மற்றுமுண்டான சிவசந்நிதிநாடு உறவின் முறையாரும் குடிபிரிதி சிட்டபரிபாலனம் பண்ணி அருளா நின்ற திருவளம்வீரலட்சுமி,விசயலட்சுமி வாசராகிய தளம் வம்முச பரிபாலராகிய ஆதிகன்னிவாடி[13]60காங்கயரோடே 60[14] காரண காங்கயனென்று இடங்கை பட்டமுத்து நல்லய்யன் குமாரன் நல்லய்யன் மோரூரு காணி[15] துந்துபி வருஷம் ஆவணி மாதம் 25 தியதி திங்கட்கிழமை சப்தமி திருவோண நட்சத்திரத்தில் 60 காங்யனுக்கு வெகுநாளாய்ப் பிள்ளையில்லாமல் 60 கருண காங்கயனென்று வந்த நல்லய்யன் குமாரன் நல்லய்யன் 60 காங்கயனுக்கு பிள்ளை வரம் வேண்டி நல்லபுள்ளியம்மன்[16] சந்நிதி

முன்பாக பச்சைப் பாப்பானெரிவி செந்து வைராக்கியம் செய்து தன் செரசினை[17] இருதுண்டாக வெட்டி செயங்கொண்டகுமாரன் நல்லய்யன் பேரிலே சந்தோஷமாகி பின்பு 60 காங்கயனுக்கு என்ன வேணுமென்று கேட்க தேவரீர் நமக்குக் கன்னிவாடியில் இடங்கைக் குட்பட்டது நடந்த மேரைக்கு[18] வடக்கிலேயும் நடப்பிக்கவேணும் தேவரீர் என்று கேட்க அப்படியே தருகிறோமென்று கையில் கீழ்க் கரைப் பூந்துறை நாட்டில் அரவகிரியில் 60 காரண காங்கயரும் செங்குந்த கோத்திர உறவின் முறையாரும் இடங்கை முதலான உறவின் முறையாரும் ருத்ரோத்காரி வருஷம் புரட்டாசி மாதம் 15 தியதி சனிக்கிழமை மாளிக்கையிச்சம்உத்தரநட்சத்திரம் இந்தச் சுபதினத்தில் கூடி முருகாவுடையா சந்நிதி[19] இந்திரவிமானத் தேர் முன்பாக இருப்பு முக்காலி[20] வைத்து ஆச்சாரஞ் செராய் 12சுமை போட்டு அக்கினி எரியவிட்டு 60 காரண காங்கயனை அதின் மேலே இருத்தி ஆண்டவர் கிரீடந்தரித்துப்பட்டம் வைத்துக்குருக்கள்மார் ஆறுபேரும் கும்பாபிஷேகம் பண்ணி அட்சதை தாம்பூலம் குடுத்து இனிமேல் செங்குந்த கோத்திரத்திற்கு நடக்கவேண்டிய சாதி ஞாயம்[21] அத்தபாக முன்பதாகக்[22] கட்டலையிட்டோம் சொன்ன விபரமாவது விசாரிக்கும் போது அடிகரை பணம் 6 வைத்து மேல் ஞாயம் பேசவும் செங்குந்தர் குத்தத்துக்கு[23] அவுதாரம்[24] பணம்12 வாங்கக் கட்டலையிட்டார்கள், காராளர் காணிக்கை ஏருக்குக் கால் பொன்னும் செங்குந்த சாதிகள்மக்கத்துக்கு[25] வாரகன் கால்...

[ஏட்டின் நகல் உதவியவர் மல்லசமுத்திரம் ஊமையாம்பட்டி கவிஞர் ந. கந்தசாமி அவர்கள் இறுதிப் பகுதி கிடைக்கவில்லை இடங்கை வலங்கைப் பிரிவு பற்றிய சிறு குறிப்பு உள்ளது பிருந்தா பெக் எழுதிய peasant society of kongu காண்க].

இந்த ஏடு மோரூர்க் காங்கேயர் காலத்தில் திருச்செங்கோட்டைச் சூழ்ந்த பகுதியில் செங்குந்தர்கட்கு ஏற்பட்ட உரிமையை விளக்குவது.

1) சதுர்யுகம் -4 யுகங்கள்
2) வாமபாகம்- இடப்பாகம்
3) பெத்தருளிய-பெற்றருளிய
4) செரையை- சிறையை
5) அரவகிரி- திருச்செங்கோடு; இம்மலைக்கு நாககிரி,நாகமலை என்ற பெயர்கள் உண்டு.
6) கொங்கன்- தலைவன்
7) வவானி- பவானி
8) திருவணிமுத்தாநதி- திருமணிமுத்தாறு
9) அலகுமுரிச்சான்- எது என்று விளங்கவில்லை

10) ஆம்பிராந்தி- அமராவதி

11) ஏழுநதிகள் பாயும் பகுதி- எழுகரை நாடு எனக்கூறப்படு கிறது. கருத்து ஆய்வுக்குரியது.

12) வஞ்சிநாடு- கரூர்ப் பகுதி போலும்(?)

13) ஆதிகன்னிவாடி-காங்கேயரின் பூர்வீக ஊர்

14) அறுபது- அறுபது தண்டிகைக் காங்கேயர் என்பதுவழக்கம்

15) காணி- உரிமை

16) நல்லபுள்ளியம்மன்-

17) செரசு- தலை

18) மேரை-முறை

19) முருகாவுடையார், முருகன் போலும்(?)

20) இருப்பு- இரும்பு

21) ஞாயம்- நியாயம்

22) அர்த்தபாகம்- அர்த்தநாரி

23) குத்தம்- குற்றம்

24) அவுதாரம்- அபராதம்

25) மக்கம்- தறி.

புலவர் செ. இராசு அளிக்கும்

# கும்பினிக் கடிதம்

ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டருக்கு 1798 ஆம் ஆண்டு பாலக்காட்டுக் கோட்டை மேஜர் கமாண்டர் எழுதிய கடிதம்;-[1]

*ஸ்ரீமன் சகல குண சம்பன்னரான சகல தர்ம பிரீதி பாலகனான பந்து சனசிந்தாமணியனான அகஸ்டித லட்சுமி பிரசன்னனான வெகுசன பரிபாலகனான நித்தியாவை தானலி நோதராக மகா மேருவுக்கு சரிசமான தீரனான மகா-ள-ள-ஸ்ரீ ஊத்துக்குளி காலிங்கராயக் கவுண்டர் அவர்களுக்கு ராஜமாலிய ராஜஸ்ரீ பாலக் காட்டுக்கோட்டை மேசர் கமண்டர் சேம்சு ரமலீ[2] சாயபு அவர்கள் மெத்தமெத்தசலாம்.*

*பெம்பாயில் பவுசுதாற மகாறாச ராஜஸ்ரீ றாசமானியறாஜஸ்ரீ சகல பவிசுக்கெல்லாம் பெரிய சென்றல் அவர்கள் இற்றியோட்டு சாயபு அவர்கள் ...ள... .. சென்டறால் அட்டலீ சாயபு அவர்கள் மலையாளத்துக்கெல்லாம் கமசல சாயபுதுரை அவர்கள் இவர்க ளெல்லாம் ஒருமனதாக யோஜனை செய்து நமக்கு அப்பனை தந் தார்கள் உங்களுக்குச் சொல்லச் சொல்லி-உம்முடையகாரியத்திலே மெத்த மெத்த சந்தோஷமாய் தங்கள் மனசுலே யென்ன காரியம் வேண்டியிருந்தாலும் வெகுமானப் பட்ட இங்கிலீஷ் கம்பெனிக் காரரோடே ராஜியாக இருக்க வேணும் சொல்லியிருந்த பிரகாரத் துக்கு அதே மேரைக்கு நமக்கு[3] அப்பணையாச்சுது.*

*அது காரியத்துக்கு இப்போ சர்க்கார் காரியத்திலே தாங்கள் கும்பினிக்கு செய்து நடக்க வேண்டிய காரியத்துக்கு யிப்பச் சம்மத மான படியினாலே தாங்கள் அறிய வேண்டி தங்களுக்கு தாக்கீதா எழுதியிருக்கிறோம். பின்னையும் நமக்கு அப்பனையான தலங்களுக் கும் தங்கள் வகையிலே தங்களைச் சேர்ந்த கவுண்டமாரும் தங்*

களுக்குச் சினேசிதமாகயிருக்கிற கவுண்டமார் ஆனார் தங்களைச் சேர்ந்து இருக்கிறார்களோ அவர்களும் தாங்களுமாக கும்பினி சரு காறத்துக்கு எந்தப் பிரகாரம் குமுக்கு செய்வீர்களோ அந்தப் பிர காரம் பிரயாசைப்பட்டு நடந்து கொள்ள வேணுமோ அந்தப்படி நடக்க வேண்டியது அந்தப்படி நடந்து கொண்டால் தங்களுட குமுக்கு வேண்டி தங்களுக்கும் தங்கள் குஞ்சு குளந்தையள் தங்கள் சீர்மையும் மோதலும் தங்களைச் சேர்ந்த கவுண்டமாரேயும் இதுக் கெல்லாம் தங்களுக்கு வேண்டி இங்கிலீஷ் கம்பெனி சர்க்கார் உங் களை வச்சுரட்சிக்கிறாப் போலே நம்முடைய வசம் உம்மிட சீமை யும் தங்களையும் கம்பெனிசர்க்கார் உள்ளவரைக்கும் ரட்சிக்கிறாப் போலே செய்து தருகிறோம். தங்கள் கையிலே எந்தப் பிரகாரம் ஆகுமோ. பாலக்காட்டுச் சேரியிலிருக்கிற ஜனத்தோடே கூடி தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களும் நமக்குத்[4] துசுமனாக இருக்கிறவனை அலாக்கு செய்ய வேண்டுமோ அப்படிக்குச் செய்ய விம் அல்லாதே போனால் திண்டுக்கல்லிலே பவுசுகளத்தோடகூடா லிண்ணு தாங்கள் செய்விக்கிறதானால் செய்யவும் இல்லாதே போனால் பளனியிலே யிருக்கிற பவுசோடே கூடானிற்று செய்ய ரதானால் செய்யவும் அல்லாதே போனால் தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களுமாக அவனையெந்த படியே சாரு செய்யவேணு மோ அந்தப்படி செய்யவும் மகா ராஜ ராஜஸ்ரீ சென்றல் இற்றி யோட்டு சாயபு அவர்களும் றாசஸ்ரீ சென்டறால் அட்டலீ சாயபு அவர்களும் கமசலசாயபு அவர்களும் இவர்கள்முன்னதாகதங்களை யெந்தபடி பெரியவாக்கி வைக்க வேணுமோ அந்தப் படியாக்கி நடப்பிச்சுக் கொடுக்கிறோம். தங்கள் மனசும் நம் மனசும் ஒன்றாக இருக்கிற படியினாலே தங்கள் காரியயக்காரர்ஒருத்தர் நம்மண்டை யிலே எந்நேரமும் பிரியாமல் காத்து இருக்கிறாப் போலே செய்ய வும். சர்க்கார் காரியம் எந்த வேளை எந்தப்படி வருமோ? ஆனபடி யினாலே தங்கள் மனுஷரைப் பிரியாமல் இருக்கச் செய்ய வேண்டியது. தாங்கள் இவ்விடத்துக்கு எந்த வேளை வந்தாலும் தங்களைக் காணுகிறது மெத்த சந்தோஷம்.

ராஜ மானிய ராஜஸ்ரீ பாலக்காட்டுக் கோட்டை மேசர் கமாண்டர் ஜேம்ஸ் ரமலீசாயபு,

(1798 மார்ச்சு 1)

1) தமிழக அரசின் பழஞ்சுவடிச் சாலையில் உள்ள கடிதத்தின் நகல்

2) சாயபு- மரியாதையாகக் குறிக்கும் சொல்

3) அப்பணை- உத்தரவு

4) துசுமன் -வேண்டாதவன் (திப்பு போலும்)

# சேமிப்பு முக்கியமானது ஏன்

## ஏனென்ருல்....

தேசிய அபிவிருத்தி, நாட்டின் வருடாந்திர வளர்ச்சி விகிதத்தைப் பொறுத்திருக்கிறது.

நாட்டின் வளர்ச்சி வேகம் நாம் எவ்வளவு முதலீடு செய்கிருேம் என்பதைப் பொறுத்து இருக்கிறது. எவ்வளவு சேமிக்கிருேம் என்பதைப் பொறுத்திருக்கிறது நம் முதலீட்டின் அளவு.

முன்னுரிமைப் பெற்ற வளர்ச்சித் துறைகளில் சேமிப்புத் தொகையை செலவிட்டால் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தீவிரமடைகிறது. எல்லா முன்னுரிமை பெற்ற வளர்ச்சித் துறைகளுக்கும் அரசு முழு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

ஆகவே தேசிய சேமிப்புத் திட்டத்தில் நீங்கள் எவ்வளவு சேமித்தாலும் அத்தொகை முழுதும் நாட்டின் வளர்ச்சி திட்டங்களுக்கு பயன்படுகிறது.

ஞாபகமிருக்கட்டும், தேசிய சேமிப்புத் திட்டமும் மற்றவர்களைப் போல் உங்கள் சேமிப்புத் தொகைக்கு கவர்ச்சியான வட்டி கொடுக்கிறது. அதோடு வரிச் சலுகையும் கிடைக்கிறது. எல்லாவற்றையும்விட நாட்டின் பொருளாதார சீரமைப்பிலும், பாதுகாப்பிலும் நாமும் பங்கு கொள்கிருேம் என்ற மன நிறைவுக்கு மதிப்பேது!

**தேசிய சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து சேமியுங்கள்.**



For Quality Retreading of

all Sizes of Tyres from

SCOOTERS TO TRACTOR

in our plant by highly skilled persons

Please Contact

**THE ANAMALLAIS RETREADING COMPANY**

225, Dr. Nanjappa Road,
COIMBATORE - 641018

PHONE 34500

BRANCH : TIRUNELVELI - 627002

PHONE : 2590

*ARC Symbol of SERVICE! SAFETY!! SAVINGS!!!*